ஸ்ரீ 2041. மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன்று.



குடி அரசு

ரூ. அ.	
வருட சந்தா	3—0
6 மாத சந்தா	1–12

[வாரப்பதிப்பு.]
ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

ரூ. அ.	
வெளி நாட்டிற்கு சந்தா ...	4—0
விளம்பரம் அங்குலம் 1-க்கு ...	0—8

மாலை 2 | ஈரோடு, அக்ஷய-வருஷ ஆனி-மீ 20-உ (4—7—26) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 10.

உண்மையான கதர்!

கெட்டியான கதர்!

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ் நாடுகாங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும் மேற்பார்வையாலும், அத்தாட்சி பத்திரத்துடன் நடைபெறுகின்றது கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

(காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்.

ஸ்ரீ காந்தி கதராலயத்தார் கை நூலால், கைத் தறியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள். எஸ். ராமநாதன்,
காங்கிரஸ் கதர் போர்டு காரியதரிசி.

விலாசம்:—ந. ராமசாமி. மானேஜர்,
ஸ்ரீ காந்தி கதராலயம், திருப்பூர்.

கதர்! கதர்! கதர்!!!

தமிழ் நாடு கதர் போர்டாரால்
அத்தாக்ஷி பத்திரம் பெற்ற

சுத்த கதர் ஜவுளிகள்.

வெள்ளை பீஸ்கள், வேஷ்டிகள், துண்டுகள், துவால்கள், சால்வைகள், அச்சு துண்டுகள், பலரகம் வெள்ளை கலர் கோட்டிங்குகள், சிட்டிகள் எல்லா ரகங்களும் கைவசம் இருப்பிலிருக்கின்றன. விலை ஜாபிதாவுக்கு கீழ் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

S. திருமலைசாமி செட்டி,
A. முருகேச முதலி.
No. 12 கச்சேரி வீதி, திருப்பூர்.

காங்கிரஸ் அத்தாக்ஷி பெற்ற சுத்த கதர்.

தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும், கிடைக்கும் விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும், கீழ் கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரிக்கு) 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்.
வைத்தீஸ்வரன்கோவில்(?) S. I Ry.

ஜீர்ணாமிர்தம்.

நங்கம் சேர்ந்த ருசிகர ராஜ ஔஷதம்.

அஜீர்ணத்தையும், மலச் சிக்கலையும் நன்கு கண்டித்து நல்ல பசியையும் ஜீர்ண சக்தியையும் தரும். தேகம் வலுப்படும். பித்தம், இருமல் வயிற்றுப் பிசம், குத்தல், மூலம் பீனிசம், மார்பெரிச்சல், காசம், புளியேப்பம், ஜ்வரகாசங்கள் முதலியவற்றை உடனே குணப்படுத்தி விடும். நல்ல ரத்த விருத்தியையும் தேக புஷ்டியையும் தரும். டின் 1-க்கு ரூ. 1. டின் 2-வரை வி. பி. அணா 5.

பிரஜாநுகூல ஔஷதாலயம், ஸ்ரீரங்கம்.

பண்டித எஸ். எஸ். ஆனந்தரின்

மஹாசந்தன தித்தைலம்.

இம் மகா சந்தனாதித் தைலத்தை அரசர்களும் ஆங்கில மருத்துவர்களும், ஐக்கோர்ட் ஜட்ஜிகளும், வக்கீல்களும், கல்வி கற்கும் மாணவர்களும் ஆண்டு அநுபவித்து நற்குணங்களைப் புகழ்ந்து கூறியிருக்கிறார்கள்.

24-அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூ. 4—4—0
12-அவுன்ஸ் 2–4–0. 6-அவுன்ஸ் 1–3–0
தமிழ் மருத்துவ சாலை,
220 தங்கசாலைத் தெரு, சென்னை

திருப்பூர் சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷெர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S. இராமநாதன்: காரியதரிசி, கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,
முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)

கத்தர் வியாபாரிகளுக்கு அறிக்கை.

தமிழ்நாடு கத்தர் போர்டின் அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கிறது. எங்கள் கதர் ஸ்டோரில் எல்லா விதமான தினுசுகளும் தயாராகிறது. கதர் போர்டின் விலைக்கே கொடுக்கிறோம். அட்வான்சுடன் ஆர்டர் அனுப்புங்கள்.

கே. எஸ். ஆர். எம். ராமசாமி செட்டியார்,
கத்தர் ஸ்டோர் அமராவதிபாளையம்,
பொன்னுக்காளிபாளையம் போஸ்டு,
(திருப்பூர் மார்க்கம்.)

வகுப்புவாரி [illegible]திநிதித்துவம்.

ஸ்ரீவைகுண்டம் வ. மி. ஷம்சுதீன் சாஹிப் பின்வருமாறு எழுதுகிறார்:—

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி லால்குடியில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை மிகவும் பலமாகக் கண்டித்துப் பேசியிருக்கிறார். அவருடைய உபந்நியாசம் எல்லாப் பத்திரிகைகளிலும் வெளிவந்துளது. அப்பிரசங்கத்தில் முஸ்லிம்களைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்லியிருப்பதால் நானும் என்னுடைய அபிப்பிராயத்தை முஸ்லிம்களுக்குச் சொல்லவேண்டியது மிகவும் அவசியமென நினைக்கிறேன். வகுப்புவாரிப் பி[illegible]த்துவ விஷயமாக அவ[illegible]ய (ஸ்ரீமான் சத்தியமூர்த்தி) கட்[illegible]ந[illegible]வு கொடுக்கக்கூடியவர்கள் இ[illegible]ல் 100-க்கு 25 பேர்களாவது இரு[illegible]ளா வென்பது சந்தேகம். நான் தற்சம[illegible] சில பொது வேலைகளில் ஈடுபட்டிருப்பதா[ல்] அவருடைய பிரசங்கத்திலுள்ள ஒவ்வொ[illegible]றுக்கும் பதில் எழுத முடியாதவனாக இருப்பது பற்றி வருந்துகிறேன். அவர் எவ்விதமான ஆதாரங்களை எடுத்துக் கூறுகிறாரோ அதற்கு மறுப்பாகத் தகுந்த ஆதாரங்களை எடுத்துக்காட்ட என்னால் முடியும். சமயம் வாய்க்கும்போது அதை எனது முஸ்லிம் சகோதரர்களுக்கு எடுத்துக் காட்டுவேன். நான் இவ் விஷயத்தைப்பற்றி இன்றைக்கு மாத்திரம் எழுதவில்லை. பலமுறையும் "ஸைபுல் இஸ்லா"த்தில் எழுதியிருக்கிறேன் என்பதை எனது முஸ்லிம் சகோதரர்கள் அறிவார்கள்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு மறுப்பாக ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் "குடி அரசு" பத்திரிகையில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தின் அவசியத்தைப் பற்றி எழுதி வருகிறார். அதை ஒவ்வொரு முஸ்லிம்களும் கவனிக்கவேண்டும். அடுத்த எலெக்ஷனில் சுயராஜ்யக் கட்சி மெம்பர்கள் அநேகர் சட்ட சபைக்கு வரலாம். அவர்களின் உதவியைக்கொண்டு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை இல்லாமல் செய்துவிட சிலர் சூழ்ச்சி செய்யலாம், அதைக் கண்டு முஸ்லிம்கள் ஏமாந்து விடமாட்டார்களென்றே நம்புகிறேன். இவ்விஷயத்தில் சென்னை மாகாண முஸ்லிம்களில் சிலர் விட்டுக் கொடுத்தாலும் இதர மாகாணத்திலுள்ள முஸ்லிம்கள் விட்டுக்கொடுக்க மாட்டார்கள் என்பது திண்ணம். நான் இறுதியாக எனது முஸ்லிம்களுக்குச் சொல்வதென்னவென்றால் வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாவிட்டால் ராஜ்ய வாழ்வில் முஸ்லிம்களின் கதி கடைப் பிணைக்கைதிய போக்கும் என்பதே. பழையபடி நாம் பாதாளக் குழிக்குள் செல்லவேண்டிய அவசியத்தையே அது குறிக்கும். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஏற்பட்ட பின்னரே நமது சமூகத்தார் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்தார்கள் என்பதை ஒவ்வொரு முஸ்லிம்களும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்.

"ஸைபுல் இஸ்லாம்".

ஓர் பிராமண வக்கீலின் மமதை.

எங்கள் திருமலைப்பட்டி கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டில் அபராதம் விதித்ததை அப்பீல் செய்வதற்காக கட்சிக்காரர்கள் சென்ற மே-மீ நாமக்கல்லிலுள்ள நரசிம்மய்ய ரென்னும் வக்கீலிடம் யோசனை கேட்கச் சென்றபோது அன்னார் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டார்களை மிகவும் அவமதிப்பாய்க் கருதி, "ஆடு மாடு மேய்ப்பவர்களுக்கெல்லாம் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளில் மெம்பர் ஸ்தானமும் பிரசிடெண்டு பதவியும் கொடுத்துவிடுவதால் அக்கோர்ட்டுகளில் தீர்ப்பாகும் விஷயங்களை இதர கோர்ட்டுகளில் அப்பீல் செய்ய அதிகாரமில்லாமல் போகின்றது. இதற்கு என்ன செய்யலாம்" என்பதாகப் பேசிக் கொண்டிருந்தாராம். அவ்வமயம் எங்கள் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டு மெம்பர்களிலொருவராகிய ரெங்கசாமி நாயக்கரென்பவரும் ஆங்கிருந்தமையால் அவர் அந்த வக்கீலை நோக்கி, "ஐயா நீங்களும் கீழ் ஸ்திதியிலிருந்துதானே உயர் பதவிக்கு வந்தீர்கள்? நீங்கள் மட்டிலும் முதன் முதலிலேயே உன்னத பதவியை யடைந்துவிட்டீர்களா? அங்ஙனமிருக்க கிராமக் கோர்ட்டார்களை மட்டிலும் அத்துணை கேவலமாக எண்ணி அவமதித்துப் பேசலாமா?" என்று வினவினாராம். இக் கேள்விக்குத் தக்க பதிலளிக்க நாவெழாமல் வக்கீலவர்கள் தம்மருகில் இருந்தவர்களை நோக்கி "இந்த ஆசாமியார்," என்பதாகக் கேட்டாராம். பின்னர் அவர்கள், 'இவரும் திருமலைப்பட்டி கிராம பஞ்சாயத்து கோர்ட்டில் ஓர் மெம்பராயிருப்பவர்' என்று சொன்னார்களாம். "ஓஹோ! அப்படியா! நான் தெரியாமல் சொல்லிவிட்டேன் நாயக்கரே! கோபித்துக் கொள்ளவேண்டாம்," என்பதாக வக்கீலவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டாராம். ஓர்கால் கிராமப் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளேற்பட்டு விட்டதால் தமக்குத் தக்க வருவாய் ஏற்பட வில்லையென்று ஐயரவர்கள் கருதினரோ? அல்லது குக்கிராமங்களிலுள்ள குடியானவர்களும் வழக்குகளை விசாரித்துத் தீர்ப்புச் சொல்லுவதா என்ற குறுகிய நோக்கத்தோடு கூறினரோ தெரியவில்லை. எவ்விதம் கூறியிருப்பினும் அது அவருடைய ஜாதி கர்வமும் வித்யா கர்வமுமேயாகும். ஐயரவர்களைப் போன்ற உயர்ந்த படிப்பாளிகளே கிராமக் கோர்ட்டார்களிடம் இத்தகைய அலக்ஷியசுபாவம் கொண்டிருந்தால் படிப்பு வாசனையே யில்லாத பாமரஜனங்கள் இவர்களிடம் எவ்விதம் நடந்து கொள்வார்கள். மேலும் பஞ்சாயத்துக் கோர்ட்டுகளிலுள்ளவர்கள் யாதொரு ஊதியத்தையும் எதிர்பாராது பொது ஜனங்களின் நன்மைக்காகவே பாடு படக்கூடியவர்களாகும். அன்றியும் இக்கிராமக் கோர்ட்டுகளில் சரியான படி நியாய அநியாயங்களை யறிந்து கொள்ளுவது போல் உயர்ந்த நீதி மன்றங்களிலும் அறிந்து கொள்ளுதல் அசாத்தியமென ஐயமறக்கூறலாம். எங்ஙனமெனின் உயர்ந்த நீதி மன்றங்களிலுள்ளவர்களோ பல மைல்களுக்கப்பாலிருப்பதால் வாதி பிரதிவாதி ஆகிய இவர்களின் வாக்கு மூலங்களைக் கொண்டும் சாக்ஷிகளைக் கொண்டுமே நியாய அநியாயங்களைத் தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது. இதிலும் ஐயரவர்களைப் போன்ற தொழிலை மேற்கொண்டுள்ள வக்கீல் மார்களோ பணத்திற்காக ஆசைப்பட்டு பார்ட்டிகளின் நடுமத்தியில் நுழைந்து உள்ளதை இல்லாததென்றும் இல்லாததை உள்ளதென்றும் தங்கள் வாக்கு சாதுர்யத்தால் நிரூபித்து நிரபராதிகளைக் குற்றவாளிகளாகவும் குற்றவாளிகளை நிரபராதிகளாகவும் செய்து விடுகிறார்கள். இதனால் நடு நிலைமையான நியாயங் கிடைப்பது மிகவும் துர்லபமாய் முடிகிறது. கிராமப் பஞ்சாயத்துக்கோர்ட்டுகளிலோ அவ்விதமன்று. அந்தந்த கிராமக் கோர்ட்டுகளிலுள்ள மெம்பர்களும் தலைவர்களும் உள்ளூர் வாசிகளேயாதலால் அந்தந்த கிராமங்களில் நடந்த குற்றங்களில் குற்றவாளி இன்னான், குற்ற மற்றவன் இன்னானென்பதாக ஒவ்வொருவரும் செவ்வனே யறிந்திருப்பார்கள். சாக்ஷியுரைப் போர்களும் தங்கள் உள்ளூர் வாசிகளின் முன்னிலையில் பொய் புகலமுன் வரமாட்டார்கள், அன்றியும் வாதி, பிரதி வாதி, சாக்ஷிக்காரர்கள் ஆகிய மூன்று திறத்தார்களிடமும் கைகள் நிறைய பீஸ் வாங்கிக்கொண்டு வியாஜ்ஜியங்களை வேண்டியபடி திருப்பி விடும் வல்லமை வாய்ந்த வக்கில் மார்களும் ஈங்கில்லை. ஆகையால் இக்கிராமாந்திரக் கோர்ட்டுகளில் வெகு எளிதில் நடு நிலைமையான நியாய மறிந்து கொள்ள வழியிருக்கின்றது. கக்ஷிக்காரர்களுக்கும் இக்கிராமக் கோர்ட்டுகளால் பொருள் நஷ்டமும் தேக கஷ்டமும் சிறிதுமில்லை யென்பது யாவருமறிந்ததே. இத்தகைய அநுகூலங்களை யெல்லாங் கருதாமல் சிறுபான்மை யோருடைய வருவாய் மட்டும் குறைகிறதே என்ற எண்ணத்தைக் கொண்டு கிராமாந்திரக் கோர்ட்டுகளிலுள்ளவர்களெல்லாம் ஆடுமாடுகள் மேய்ப்பவர்களென்று அலக்ஷியமாய் அறைதல் ஐயர் போன்ற அந்தஸ்திலுள்ளவர்களுக்கு அழகல்லவென்பதை நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். ஆடுமாடுகள் மேய்த்தல் இழிவான செய்கையாகுமா? எல்லாம் வல்ல எம்பிரானாகிய சாக்ஷாத் கண்ணபிரான் கோகுலங்களைக்காக்க வில்லையா? இத் தொழிலால் பிறர் பொருளை நய வஞ்சகத்தாலும், மோசத்தாலும் கவர்வதற்கு ஏதேனும் வழியுண்டா? அல்லது இத் தொழில்புரிவோர்களுக்கு விவேகமென்பது சிறிதுமில்லாமல் போய்விடுமா? பலவாற்றானும் பிறரை வஞ்சித்தே தங்கள் வாணாட்களை சுகமாய் கழிப்போர்களுக்குத் தான் அதிகார சுதந்திரம் கொடுபட வேண்டுமா? இனியேனும் நஞ்சகோதரர்கள் கிராமவாசிகளை இவ்விதம் இழிவாய்க் கருதாமலிருப்பார்களென்று பெரிதும் நம்புகிறேன்.

S. R. குப்பமுத்துடையார்,
பெரியகுளம் மிட்டா ஜமீன்தார்,
திருமலைப்பட்டி.

வேம்படிதாளம் ரயில்வே ஸ்டேஷன்.

அரியானூருக்கும் மகடஞ்சாவடிக்கும் மத்தியில் பொது ஜனங்களின் சௌகரியத்தின் பொருட்டு வேம்படிதாளத்தில் ரயில்வே ஸ்டேஷன் ஏற்படுத்த வேணுமாய் மகா-ள-ள-ஸ்ரீ மானேஜிங் டைரெக்டர் துரை அவர்கள் இந்தியாவிற்கு விஜயம் செய்த சமயத்தில் சேலம் ஜங்ஷனில் செய்த உத்திரவின்படி ரயில்வே ஸ்டேஷன் வேலை கூடியவரை பூர்த்தியாகிவிட்டது. ஆகஸ்டு மாதம் 1 தேதி வேம்படிதாளம் ஸ்டேஷன் திறக்கப்படுமெனத் தெரிகிறது.

நாகை தொட்டியர் மகாநாடு.

இம் மகாநாடு நாகை மேலக்கோட்டை வாசல் மருந்துகொத்தலம் பிள்ளைத்தோட்டத்தில் முனிசிபல் கவுன்சிலர் திரு. எ. சாலமோன்ராய செட்டியார் தலைமையில் கூடியது. திருவாளர்கள் டி. பி. ஆறுமுகம் பிள்ளை, உத்திராபதி பிள்ளை, ராஜமாணிக்கம் செட்டியார், மாணிக்கதாஸ், துரைசாமி முதலியோர் தொட்டியர் குல முன்னேற்ற விஷயமாய்ப் பேசினார்கள்.

தமிழ் மக்களே!

வெள்ளைக்கார ஆட்சி, நம்மை அடிமையாக்க வில்லை. நய வஞ்சகம் நிறைந்த பிராமணீயமே நம் நாட்டையும் மக்களையும் அடிமையாக்கிற்று. ஆதலால் பிராமணீய ஆதிக்கத்தினின்று விடுபடுவதே நீங்கள் பெற வேண்டிய முதல் சுயராஜ்யம்.

முஸ்லீம்கள்

"சுதேசமித்திர" னும் "ஸைபுல் இஸ்லா" மும்.

தென்னாட்டுப் பார்ப்பனர்களின் சூழ்ச்சியை பொறுமையோடு ஜாக்கிரதையாய் கவனித்து வந்த "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகையானது ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்களைப் போலும் டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களைப் போலும் திடீரென்று ஒரு வெடி குண்டைப் போட்டு விட்டது:

அதாவது, "மாகாணச் சட்டசபைகள் இந்தியா சட்டசபைகள் முதலியவற்றிற்கு முஸ்லிம் பிரதிநிதிகள் தங்களது சமூகத்தின் சார்பாக நிற்பது நலமா, அல்லது சுயராஜ்யக்கட்சியாரின் சார்பாக நிற்பது நலமா?" என்றும், திருச்சி மௌலானா ஸையத் முர்த்துஸா சாஹிபு அவர்கள், முதலில் சுயராஜ்யக் கட்சிக்கு எதிராகநின்று இந்தியா சட்டசபை ஸ்தானம் பெற்ற பிறகு சுயராஜ்யக்கட்சியில் சேர்ந்ததைப் பற்றியும், எல்லைப்புற முகமதியர்களுக்கு சீர்திருத்தம் வேண்டுமென்று மௌலானா தீர்மானம் கொண்டு வந்த காலத்தில் அதை சுயராஜ்யக் கட்சியார் எதிர்த்ததின் காரணமாய் சுயராஜ்யக்கட்சியை விட்டு விலக்கிக் கொள்ளும்படி மௌலானாவைக் கேட்டுக்கொண்டிருக்க இப்போது மறுபடியும் சுயராஜ்யக் கட்சியில் மௌலானா சேர்ந்திருப்பதின் காரணமென்னவென்றும் இம்மாதிரி சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் நிற்கும் முஸ்லிம் பிரதிநிதிகளை முஸ்லிம் சமூகம் ஆதரிக்கலாமா என்றும் பலர் தன்னை (ஸைபுல் இஸ்லாம்) கேட்பதால் அது கீழ் கண்டபடி எழுதுகிறது:—

"காங்கிரஸிலிருந்து சுயராஜ்யக் கட்சியென்று ஒன்று பிரிந்த காலமுதல் அக்கட்சியினால் தேசத்திற்காவது முஸ்லிம் சமூகத்திற்காவது காங்கிரஸால் உண்டாகும் நன்மை களைப்பார்க்கிலும் அதிக நன்மை உண்டாகுமென்ற நம்பிக்கை நமக்குச் சிறிதளவும் இருந்தது கிடையாது" என்றும், தாம் அதை ஒரு போதும் ஆதரிக்கவில்லை யென்றும் "சுயராஜ்யக்கட்சியின் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கும் சில தலைவர்கள், சுயராஜ்யக் கட்சியை ஜனங்கள் ஆதரிக்க வேண்டுமெனக்கூறி அதற்காகப் பிரசாரம் செய்து வருவது நமக்குப் பிடிக்கவில்லை' என்பதும் ஒருவர் "தமது மனச்சாக்ஷி ஒப்புக்கொள்ள முடியாத ஒரு கட்சியை ஆதரிக்கும்படி பொது ஜனங்களுக்குப் போதிப்பது கொஞ்சமும் அர்த்தமற்ற தன்மை" யென்றும், அப்படி ஆதரித்து வந்த சில தலைவர்களும் விலகிவிட்டார்கள் என்றும், சிலர் விலகும் தருவாயில் இருக்கிறார்கள் என்றும் எழுதிவிட்டு கடைசியாக தனது முடிவான' அபிப்பிராயத்தை எழுதுவதில் "சுயராஜ்யக் கட்சியார் சமூகப்பிரசினை விஷயங்களில் பக்ஷபாதம் காட்டி நடந்து கொள்வதால் முஸ்லிம் பிரதிநிதிகள் சட்டசபைகளுக்கு சுயராஜ்யக் கட்சியின் சார்பாய் நிற்காமல் சமூகத்தின் சார்பாய் நிற்பதே நலம்" என்றும், முஸ்லிம் சமூகத்தார் "தங்கள் சமூகத்தின் சார்பாய் நிற்கும் பிரதிநிதிகளையே ஆதரித்து அவர்களுக்கே ஓட்டுக் கொடுக்க வேண்டு" மென்றும், முஸ்லிம் சமூகத்தார் "இன்றியமையாத அவசியம் என்று கருதும் சில விஷயங்களை சுயராஜ்யக் கட்சி மறுக்கிறது," என்றும், "இந்நிலைமையில் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து அவர்கள்கொள்கைகளை ஒப்புக்கொண்டு சுயராஜ்யக் கட்சியின் சார்பாக சட்டசபைக்குச் செல்லும் முஸ்லிம் பிரதிநிதிகளால் முஸ்லிம் சமூகத்திற்கு நன்மை உண்டாகாது என்பதே தனது முடிவு" என்றும் எழுதிவிட்டு பின்னும் "அக்கட்சியின் சார்பாக நிற்கும் முஸ்லிம் பிரதிநிதிகளை முஸ்லிம் வாக்காளர்கள் ஆதரிக்கக்கூடாது" என்றும், "அதுவே தனது முடிவான அபிப்பிராய" மென்றும் தீர்ப்பு சொல்லிவிட்டது. இதைப் பார்த்த பார்ப்பன மித்திரனாகிய "சுதேச மித்திரனு" க்கு ஆத்திரம் பொங்கி விட்டது. என்ன செய்வான்? பாவம்! ஒரு துடி துடித்துவிட்டு, கடைசியாக தன்னிடமிருக்கும் சர்வ வல்லமை பொருந்திய ஒரே ஆயுதமாகிய, அதாவது பார்ப்பனர்களின் சூழ்ச்சியையும் அயோக்கியத் தனத்தையும் யாராவது வெளியிட்டால் அவர்களைக் கொல்ல வேண்டுமென்கிற அவசியம் நமது பார்ப்பனருக்கு ஏற்படும்போது கொஞ்சமும் தயவு தாக்ஷிணியம், இரக்கம் இல்லாமல் தங்கள் முழு பலத்தோடும் கூடி ஓங்கி அடிப்பதற்கு எதை உபயோகிப்பதென்றால் "ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிட்டார்" "ஜஸ்டிஸ் கட்சிக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டார்" என்றுசொல்லுவது வழக்கமாதலால், அதே ஆயுதத்தை "ஸைபுல் இஸ்லாமீ" து தொடுத்துவிட்டான்.

இந்த ஆயுதத்தைப் பல தடவைகளில் உபயோகித்திருப்பது வாசகர்களுக்குத் தெரியும். உதாரணமாக ஒன்றிரண்டைக் கீழே குறிப்பிடுகிறோம்:—

திருச்சியில் தமிழ் நாடு காங்கிரஸ்கமிட்டியில் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரை தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தலைவராய்த் தெரிந்தெடுத்த காலத்தில் நமது பார்ப்பனத் தலைவரான ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் நாயக்கர் பேரில் "நம்பிக்கையில்லை" தீர்மானம் கொண்டு வரப்பாடுபட்டு, அதற்காக ஒரு ஆசாமியைப் பிடித்தார். அது யாரென்றால் ஸ்ரீமான் வா. வே. சு. ஐயரேயாகும் ஏனெனில் சேரமாதேவி குருகுலத்திற்குப் பணம் கொடுக்கக் கூடாது என்று வாதாடி ஐயரின் விரோதத்தை சம்பாதித்திருந்ததால் அவரைக்கொண்டு நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவரச் செய்தார். இந்த இரகசியத்தை அறிந்த ஸ்ரீமான் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் எழுந்து, "இந்த தீர்மானம் வகுப்பு துவேஷத்தின் மேல் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இப்போது தான் முதன்முதலாக ஒரு பார்ப்பனரல்லாதார் காங்கிரஸ் கமிட்டித் தலைவராகி யிருக்கிறார். அதைச் சகிக்கிகாத சில பார்ப்பனர் செய்யும் சூழ்ச்சி இது வென்பதை நான் அறிவேன். இதன் பலன் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்களுக்கு ஆபத்தாய் முடியும்" என்று சொன்னார். அதன் பேரில் ஐயங்கார் "கனக்" கனும் சில பார்ப்பனர்களுமான 12 பேர் தவிற 90 பேர் களால் ஸ்ரீமான் வா. வெ. சு. ஐயரால் கொண்டுவரப்பட்ட, ஐயங்கார் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது.

அது சமயம் ஸ்ரீமான் முதலியாரைக் கொல்ல "சுதேச மித்திரன்" "வகுப்பு துவேஷத்தில் ஸ்ரீமான் முதலியார் புகுந்து விட்டார்," "வகுப்பு துவேஷம் கிளப்புகிறது" என்றும் எழுதி முதலியாரைப் பார்ப்பனர்கள் ஆதரிக்காமல் இருப்பதற்கும், அவர் ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்துவிட்டார் என்று பலர் நினைக்கட்டுமென்றும் கெட்ட எண்ணங்கொண்டு அவர்பேரில் அந்த ஆயுதத்தை எறிந்தான்.

மற்றொரு சமயம் டாக்டர் வரதராஜுலு நாயுடுகார் குருகுலப்போர் ஆரம்பித்த காலத்தில் அவரைக் கொல்லுவதற்கும் "சுதேசமித்திரனு" ம் "ஹிந்து" வுமாகிய பார்ப்பனப் பத்திரிகைகள் சூழ்ச்சியை ஆரம்பித்து "டாக்டர் வரதராஜுலு நாயுடு ஜஸ்டிஸ் ஆபீசிற்குப் போனார்," என்று பெரிய எழுத்துக்களில் எழுதி அவர் பேரில் அந்த ஆயுதத்தை எறிந்தான்.

மறுபடியும் ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரை ஒழிக்கவும் இதே ஆயுதத்தை உபயோகிக்கிறான். ஸ்ரீமான்கள் சக்கரைச் செட்டியார், ஆரியா இவர்கள் பேரிலும் சமீபத்தில் இதே ஆயுதம் பிரயோகிக்கப்பட்டது.

இவை போன்றே இப்போது நமது "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகை மீதும் இந்த சர்வ வல்லமை பொருந்திய ஆயுதத்தை எறிவதற்கு ஆரம்பித்திருக்கிறான். அதாவது இப்போது அவன் உபயோகிக்கும் புது ஆயுதத்தின் வேகம் "ஜஸ்டிஸ் கட்சியில் சேர வேண்டு மென்று 'ஸைபுல் இஸ்லாம்' நினைக்கிறதா?" என்று கேட்பதேயாகும். இனி அடுத்த தடவை "ஸைபுல் இஸ்லாம்" ஜஸ்டிஸ் கட்சிக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டது என்றும், அதற்கடுத்த தடவையில் "ஸைபுல் இஸ்லாம்" ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விட்டது என்றும் "சுதேசமித்திரன்" சொல்லுவானென்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

இவ்வளவும் எழுதி பார்ப்பன மித்திரன் மகம்மதிய சமூகத்திற்கே ஒரு எச்சரிக்கை செய்கிறான். அதாவது "முஸ்லிம்களுடைய சமூகம் மதம் ஆகியவைகளின் நன்மையைப் பொருத்த காரியங்கள் பிற சமூகங்களின் உரிமையைப் பாதிக்காத வரையில் அவைகளைப் பற்றி எவரும் ஆக்ஷேபிக்க மாட்டார்," என்று சொல்லுகிறான். பாதிப்பதாய் தனக்குத் தோன்றினால் ஆக்ஷேபிப்பேன் என்ற வீரப்பிரதாபம் அதில் தொக்கியிருக்கும்படி இந்த நிபந்தனை ஏற்படுத்துகிறான். பிற சமூகத்தின் உரிமை என்பதற்கு நய வஞ்சகக் கூட்டத்தின் மித்திரனாகிய "சுதேசமித்திரன்" அகராதில் என்ன அர்த்தமிருக்கிறது? பார்ப்பனர் வாழும் தெருவில் பார்பனரல்லாதார் நடப்பதும், பார்ப்பனர் பக்கத்தில் பார்ப்பனரல்லாதார் வருவதும், பார்ப்பனரோடு பார்ப்பனரல்லாதார் பேசுவதும் பார்ப்பன சமூகத்தின் உரிமையில் குறுக்கிடுவதாகவே அர்த்தம் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பார்ப்பன மத ஆதாரங்களில்-பார்ப்பன வேதங்களில் மகமதியர்கள்—"மிலேச்சர்கள்" என்று எழுதி வைத்து அதை பூஜித்துக் கொண்டுவரப்

படுகிறது. முஸ்லிம் பாஷைக்கும் "மிலேச்சர் பாஷை" என்றே அவர்கள் அகராதியில் எழுதப்பட்டிருக்கிறது. முஸ்லிம்களால் ஆகாரத்திற்காக தங்கள் வேதக் கட்டளைப்படி உபயோகிப்பதாய் சொல்லும் சாதனம் பார்ப்பனர் மதக் கோட்பாடின்படி மற்ற சமூகங்களின் உரிமைகளில் குறுக்கிடுவதாகவே இருக்கிறது. அது போலவே மற்ற சமூகமும் தங்கள் மத உரிமைகளை நிறைவேற்ற மேள தாளங்களுடன் தெருவில் நடப்பது மகமதிய சமூகத்தின் உரிமைகளில் பிரவேசிப்பதாகவே கருதப்படுகிறது. ஆதலால் சமூக உரிமை என்கிற ஒரு காரணத்தை வைத்துக் கொண்டே "மித்திரன்" முஸ்லிம் சமூகத்தையே அழித்தாலும் அழிக்கலாம்.

சமூக உரிமை என்று இம்மாதிரி ஒருவருக்கொருவர் ஒரே பிடிவாதமாய் ஒரு சமூகத்தாரின் உரிமைகளில் மற்றவர்கள் பிரவேசித்தால் கலகம் செய்வது என்று வீரப்பிரதாபம் பேசுவதால் தேசத்திற்கு எப்படி நன்மை உண்டாகும் என்று "சுதேசமித்திரன்" நினைக்கிறான் என்பது நமக்குப் புலனாகவில்லை. ஒருவருக்கொருவர் தங்களது குருட்டு நம்பிக்கையின் உரிமைகளில் கொஞ்சம் விட்டுக்கொடுத்துத்தான் ஆகவேண்டும். உரிமை என்பது தற்கால வயிற்றுப் பிழைப்புக்கும் சுய நலத்திற்கும் ஒரு சமூகத்தை அடக்கி ஒரு சமூகம் ஆதிக்கம் செலுத்தவுமே உபயோகப்படுகிறதே யல்லாமல் ஜீவன்களுக்குப் பொதுவாய் உள்ள உரிமைகளையோ மனுஷ கோடிகளுக்குப் பொதுவாக உள்ள உரிமைகளையோ காக்க உபயோகப்படுவதில்லை. இந்த நிலைமையில் இம்மாதிரி தந்திரமான வார்த்தைகளால் பாமரர்களை எத்தனை காலத்திற்கு ஏமாற்ற முடியும் என்று "மித்திரன்" நினைத்துக் கொண்டிருக்கிறான் என்பதும் நமக்கு விளங்கவில்லை. "மித்திரன்" கூட்டத்தார் இவ்விதம் சொல்லிக்கொண்டு திரியும் இரகசியம் என்ன வென்று நாம் யோசித்துப் பார்ப்போமானால் ஒரே விஷயம்தான் நமக்கு விளங்குகிறது. அதாவது 'உரிமை' 'உரிமை' என்று ஹிந்துக்களையும் மகமதியர்களையும் மூட்டி விட்டு நிரந்தர பகையை ஏற்படுத்தி விட்டால் தேசத்தில் சிறு வகுப்பார்களாயுள்ள பார்ப்பனருக்கும் அரசாங்கத்தாருக்கும் தங்கள் ஆதிக்கத்தையும் ஆட்சிகளையும் நடத்துவது வெகு சுலபமாகி விடும். ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒற்றுமையாகி விட்டால் பார்ப்பனர்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஆபத்து தான். இந்தக் கருத்தைக் கொண்டேதான் மகாத்மாவின் ஒத்துழையாமையை ஒடுக்க ஒத்துழையாமைக்கு வெளியில் பண்டித மாளவியாவும், ஒத்துழையாமைக் குள்ளிருந்து கொண்டே பிராமண சம்மந்தியாகிய தேசபந்து தாஸைக் கொண்டு தென்னாட்டுப் பார்ப்பனரும் சூழ்ச்சி செய்து ஒத்துழையாமையை அழித்து பழைய மாதிரி செய்து விட்டார்கள். இதன் பலனைப் நமது பார்ப்பனர்களுக்கு அரசாங்கத்தாரால் தக்க சன்மானங்கள் இப்போது அளிக்கப்பட்டு வருவதிலிருந்தே எவரும் சுலபத்தில் தெரிந்து கொள்ளலாம். உரிமை என்பது ஜனக் கட்டாலோ பணத்தாலோ தந்திரத்தாலோ ஏமாற்றத்தாலோ பலமுள்ளவனுக்கு ஒருவிதமாகவும் பலமில்லாதவனுக்கு வேறு விதமாகவும் தான் இருந்து வருகிறது.

தங்கள் மததர்மத்தின்படி தங்கள் கோயிலுக்குப் போய் தெய்வங்களைக் கண்டு தரிசிக்க வேண்டுமென்பது ஒரு சமூகத்தாரின் உரிமை.

அவர்களை உள்ளே விடாமல் தடுக்க வேண்டியது மற்றொரு சமூகத்தாரின் உரிமை.

தங்கள் மதவேதத்தைப் படிக்க வேண்டுமென்பது ஒரு மதத்தைச் சேர்ந்த ஒரு சமூகத்தாரின் உரிமை.

அப்படி தங்கள் வேதத்தைப் படிக்கக் கூடாது என்பது அதே மதத்தைச் சேர்ந்த மற்றொரு சமூகத்தார் உரிமை.

அதுபோலவே தங்கள் கோயிலுக்கு முன்னால் மேளம் அடிக்கக் கூடாது என்பது மகமதிய மதத்தின் உரிமை என்று சொல்லப்படுகிறது.

இப்படியாக அநேக சமூகங்களுக்கு அநேக உரிமைகள் உண்டு. இவைகளை நிறைவேற்ற எல்லா சமூகத்தினருக்கும் உரிமை இருக்க வேண்டுமென்றுதான் ஒவ்வொரு சமூகத்தார்களும் நினைப்பார்கள். நினைப்பது தப்பிதமென்று எவனாவது சொன்னால் அவனை யென்னென்று சொல்லுவது? அவரவர்கள் உரிமை காப்பற்றப்பட வேண்டுமானால் காப்பாற்றப் படக்கூடிய ஸ்தாபனத்தில்—அதிகாரத்தில்—பதவியில்--அவனவனுக்குப் பிரதி நிதித்துவ உரிமை இருந்தால்தான் முடியுமே அல்லாமல் வேறு எப்படி காப்பாற்றப்படும்? அரசியல் என்பதே மனித உரிமை. மனிதன் என்பதும் தேசத்தையும் மதத்தையும் வகுப்பையும் குறி கொண்டிருப்பதே யல்லாமல் வேறல்ல. அப்படிப்பட்ட மனிதனுக்கு உரிமை என்பது, அவனது தேசம் மதம் வகுப்புகளின் உரிமையைக் காப்பதுதானே யல்லாமல் வேறு எதைச் சொல்லக்கூடும்? என்னுடைய வகுப்பார் ஒரு மதத்தில் இருப்பதால் தெருவில் நடக்கும் உரிமை பெற முடியா விட்டால் அந்த மதத்தைப் பற்றி எதற்காக நான் கவலை கொள்ள வேண்டும்? என்னுடைய மதத்தினர் ஒரு தேசத்தில் இருப்பதால் மத உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள முடியாமற் போயின் அந்த தேசத்தைப் பற்றி நான் எதற்காகக் கவலை கொள்ள வேண்டும்? என்னுடைய தேசத்தார் ஒரு அரசாங்கத்தின் கீழ் இருப்பதால் அந்த தேசத்தின் உரிமையைக் காப்பாற்றிக் கொள்ள முடியாவிட்டால் நான் எதற்காக அந்த தேசத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டும்? ஆதலால் உரிமையின் தத்துவம் என்ன என்பதை யோசிப்பவர்களுக்கு விளங்காமல் போகாது. தற்காலம் முன்னேற்றமடைந்து யிருப்பவனே முன்னேறி வருவதுதான் அவன் உரிமை யென்றும், பின்னடைந்திருப்பவன்—தாழ்த்தப் பட்டவன்—பின்னடைந்து கொண்டிருப்பதுதான் அவன் உரிமை யென்றும் சொல்லப்பட்டால் பின்னால் இருப்பவர்கள் கதி என்னவாகு மென்று பிற்போக்கடைந்திருக்கிறவர்கள் சிந்திக்காமலிருக்க முடியாது. அதை உத்தேசித்தே "ஸைபுல் இஸ்லாம்" வகுப்புவாரி பிரதி நிதித்துவம் தான் மகமதிய சமூகத்தின் உரிமை என்கிறது. அதை சுயராஜ்யக் கட்சி மறுக்குமானால் அதில் எப்படி மகமதியர்கள் வந்து சேரக்கூடுமென்று "மித்திரன்" எதிர்பார்க்கிறான் என்பது நமக்கு விளங்கவில்லை. ஜனாப்களான ஹமீத்கான் சாஹிப்பையும் ஷாபிமுகமது சாஹிப்பையும் பஷீர் அஹமது சையத் சாஹிப் அவர்களையுமே முஸ்லிம்களின் "சத்துரு" என்று "மித்திரன்" நினைத்து விட்டான்போலும். மௌலானாக்கள் முகமதலி, ஷவுக்கதலி, டாக்டர் கிச்லு போன்றவர்களும், சர். அப்துல்ரஹீம் மௌல்வி அஹமதுசையத் சாஹிப் போன்றவர்களும் இன்னும் லக்ஷ்மணபுரி காங்கிரஸிலிருந்த மகமதிய தலைவர்களையும் மற்றும் அநேக பெரிய இந்திய மகமதிய தலைவர்களையும் மேலே கண்ட முஸ்லிம் "சத்துரு"க்களான ஜனாப்கள் ஹமீத்கான், ஷாபிமகமது, பஷீர் அஹமது சையத் ஆகிய மூவர்களைக் கொண்டே கொன்றுவிடலாமென்று "மித்திரன்" நினைக்கிறான் போலும்.

இந்தப் பிரகாரமான பார்ப்பன "மித்திரன்" சூழ்ச்சி வாதத்திற்கு "ஸைபுல் இஸ்லாம்" தனது ஜூன் 26-ந் தேதி தலையங்கத்தில் 4 கலம் கொண்ட பதிலை தகுந்தபடி எழுதியிருக்கிறது. அவற்றில் மாணிக்கம் போல் உள்ள ஒரு விஷயத்தை மாத்திரம் இங்கு எழுதிவிட்டு இதை முடிக்கிறோம்.

முஸ்லிம்களுக்கு தனி வாக்காளர் தொகுதி வேண்டியதில்லை யென்பதற்கு "சுதேசமித்திரன்" சொல்லும் காரணங்கள் என்னவென்றால் ஜனாப்களான ஹமீத்கான் சாஹிப் ஷாபிமஹமது சாஹிப் ஆகிய இரு கனவான்கள் ஹிந்து ஓட்டர்கள் அதிகமாயுள்ள பேட்டைகளில் சென்னைக் கார்ப்பரேஷனுக்கு பிரதிநிதிகளாய் நின்று ஜெயிக்க வில்லையா? ஆதலால் முஸ்லிம்களுக்கு தனி வாக்காளர் தொகுதி தேவையில்லை என்பதேயாகும். ஆனால் "ஸைபுல் இஸ்லாம்" பத்திரிகை "ஜனாப்கள்ளான ஹமீத்கான், ஷாபிமுகமது சாஹிப் ஆகிய இருவரும் ஸ்ரீமான் எஸ. சீனிவாசய்யங்கார் இஷ்டப்படி நடந்து அவருடைய முழுதயவையும் பெற்று இருப்பதன் காரணமாக.........ஐயங்கார் ஹிந்து வாக்காளர்களுக்குத் தக்க சமாதானம் சொல்லி, ஜனாப்கள் ஹமீத்கான் ஷாபிமுகமது சாஹிப் ஆகியோரின் நடத்தைக்கு ஐயங்காரே ஜாமீன் கொடுத்த காரணத்தினாலேயே ஹிந்து வாக்காளர்கள் அவ்விரு முஸ்லிம்களுக்கு ஓட்டுக் கொடுத்திருக்கிறார்கள் என்பது சென்னை மாகாணம் முழுதுமே அறிந்த விஷயம். அல்லாமலும் ஐயங்கார் தயவைப் பெற்று தங்களுக்காக ஐயங்காரை ஜாமீன் வைத்து ஓட்டுப்பெறுவதன் பெருட்டு ஜனாப்கள் ஹமீத்கான் ஷாபிமகமது சாஹிப்ஆகிய இருவர்களும் நடந்து கொள்ளுகிற மாதிரி சுயமதிப்புள்ள வேறு எந்த முஸ்லிம்களாலும் சாத்தியப்படாதாகையால் ஐயங்காருக்கு நல்ல பிள்ளைகளாய் நடந்து ஓட்டுப் பெற்ற முஸ்லிம்களின் உதாரணத்தை "மித்திரன்" மற்ற முஸ்லிம்களுக்கும் எடுத்துக்காட்டினால் அதை முஸ்லிம் உலகம் கொஞ்சமும் ஒப்புக்கொள்ள முடியாது........"

(இதன் தொடர்ச்சி 13-வது பக்கம் பார்க்க.)

ஐயங்கார்.

ஸ்ரீமான் வெங்கிட்டரமணய்யங்கார் எப்படியாவது கோயமுத்தூர் ஜில்லாக் குடியானவர்களை ஏமாற்றி ஓட்டுப்பெற்று சட்டசபை மெம்பராகி பார்ப்பனர்கள் உயர்ந்த ஜாதி, பார்ப்பனரல்லாதார் தாழ்ந்த ஜாதி "சூத்திரன்," அடிமை, வேசிமக்கள் என்பதை நிலை நிறுத்தப் பார்க்கிறாரேயல்லாமல் கண்ணியமாய் நடந்துகொள்ளலாம் - மனுஷத் தன்மையோடு வாழலாம்- என்கிற கவலையையே தூரக் கட்டி வைத்துவிட்டார். அதற்கேற்றாற்போல் "சுதேசமித்திரன்" பத்திராதிபர் தன்னுடைய சம்மந்தி ஆனதாலும், "ஹிந்து" பத்திராதிபர் அவருடைய மருமகன் ஆனதாலும் ஐயங்காரின் அக்கிரமங்களை யெல்லாம் மறைத்து, சதா பொய்யாலும் புளுகாலும் புகழ்ந்து எழுதிக்கொண்டே வருகிறது. அதற்கேற்றாற்போல் ஆங்காங்குள்ள பத்திரிகை நிருபர்களும் பெரும்பாலும் பார்ப்பனர்களாகவும் ஸ்ரீமான் ஐயங்காரிடம் பொறுக்கித் தின்பவர்களாகவுமே யிருப்பதால் அவர்களும், ஸ்ரீமான் ஐயங்கார் ஆகாயத்தை வில்லாய் வளைத்ததாகவும் மணலைக் கயிறாய்த் திரித்ததாகவும் உலகத்திற்கே சாதித்து விட்டதாகவும் எழுதிக் கூலி வாங்கிக் கொள்ளுகிறார்கள். பார்ப்பனரல்லாதாரில் வேறு வழியில் பிழைக்க முடியாத சில வயிற்றுப் பிழைப்பு தேச பக்தர்களும், வயிற்றுச் சோற்று பத்திராதிபர்களும் ஐயங்காரை 'இந்திரன்' 'சந்திரன்' என்று பேசியும் எழுதியும் வாழ்கிறார்கள்.

இவைகளின் பலனாக ஸ்ரீமான் ஐயங்காருக்கு அகம்பாவம் தலைமேல் ஏறி தலை விறைத்துக் கொண்டிருப்பதோடு ஓட்டர்களான நமது குடியானவர்களும் பாமர ஜனங்களும் "முட்டாள்"களாயிருக்கும் வரை தனக்கு யாதொரு குறைவும் இல்லையென்றும், சென்னை சட்ட சபைக்குத் தானே சிரஞ்சீவி யென்றும் நினைத்துக்கொண்டு தலை கிழாய் நடக்கிறார். அவற்றில் சிலவற்றை கீழே குறிப்பிடுகிறோம்.

தான் கோபி மகாநாட்டில் கள்ளு முட்டியைப்பற்றிப் பேசும்போது, முட்டிகளை நேரில் பார்த்தவர்கள், ஐயங்காரை வளைத்துக் கொண்டதால் அதற்குப் பொது ஜனங்கள் திருப்தி அடையும்படி யாதொரு சமாதானமும் சொல்லாமல், "தெளுவு இறக்க தென்னை மரத்தில் முட்டி கட்டுகிறேன், அதிலிருந்து சர்க்கரைக் காய்ச்சுகிறேன்" என்றும், "என்னுடைய மரத்தில் தெளுவு கட்டுவதோ, தேங்காய் காய்க்க விடுவதோ அது என்னுடைய இஷ்ட"மென்றும் சொன்னதோடு, அப் பேச்சுகளை பத்திரிகைகளில் போடாமலும் செய்துவிட்டு, கடைசியாய் "ஒருவர் என்னை லஞ்சம் கேட்டார், கொடுக்கமாட்டேன் என்று சொன்னேன், அதனால் என்னைக் கெடுக்க ஆரம்பித்து விட்டா"ரென்றும், தான் ஏதோ யாருக்கும் லஞ்சமே கொடுக்காத பதிவிரதா தன்மையைக் காட்டி, தனது நடவடிக்கையை மறைக்கப் பார்த்தார். அந்தக் கூட்டத்திலிருந்த மகா ஜனங்கள் ஐயங்காரின் தன்மையை நன்றாக அறிந்துகொண்டதோடு இதன் பலனாய் சிலர் ஐயங்காருக்குத் தக்க சன்மானங்களும் செய்தார்கள்.

இவை நிற்க, கிராமத்துக் குடி ஜனங்களிடம், கேவலம்; ஓட்டுப் பெறுவதற்காக கொஞ்சங்கூட அஸ்திவாரமே யில்லாமல் இரண்டு லட்சம் ரூபாய் தர்மம் செய்திருக்கிறேன் என்று ஒரு ஆகாயக் கோட்டை கட்டி, ஆரம்ப விழா நடத்தி, பத்திரிகைகளில் "தர்மப் பிரபு" "கலியுகக் கர்ணன்" என்று பெயர் வரும்படி செய்தார். இந்த விஷயத்தைப் பற்றியும் ஒரு சமயம் வேறு ஜில்லாக்காரர் நம்பி ஏமாந்திருப்பார்களே தவிர இந்த ஜில்லாக்காரர்கள் யாருமே ஏமாறவில்லை. எல்லோருக்குமே இந்த தர்மத்தின் இரகசியத்தை "குடி அரசு" வெளிப்படுத்தி விட்டது.

தவிர, தான் பொது நன்மைக்காகவே வக்கீல் வேலையை விட்டு விட்டதாகக் குடியானவர்களை ஏமாற்றி வருகிறார். இதன் இரகசியமும் அநேகருக்குத் தெரியாமலில்லை. அதாவது, ஒரு சமயம் கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர் ஒருவர் இவர்பேரில் சில குற்றங்களை யேற்படுத்தி, இவரை வக்கீல் வேலையில் இருந்து நீக்கிவிடவேண்டும் என்றும் இவரின் சன்னதை ரத்துசெய்யவேண்டும் என்றும் ஹைக்கோர்ட்டுக்கு எழுதிவிட்டார். அது எப்படியிருந்தாலும், அதுவல்லாமல் வக்கீல்கள் சொந்த வியாபாரம், வேறு தொழில் ஆகியவை செய்யக்கூடாது என்கிற சட்டமுண்டு. அந்தச் சட்டத்திற்கு விரோதமாய் ஏழைத் தொழிலாளரான தறிகாரர்கள் வாயில் மண்ணைப் போடும்படியான, நெசவு இயந்திர சாலையை ஏற்படுத்தி; அதன் மூலம் தனக்கு வருஷம் பத்தாயிரம் இருபதினாயிரம் வருமானம் வரும்படியான ஏற்பாடு செய்து கொண்டதினிமித்தம் ஐயங்கார் வக்கீலாயிருக்க சர்க்கார் அனுமதி கொடுக்கமாட்டார்களானதால், தானே வக்கீல் வேலையை விட்டுவிட்டதாகப் பேர் செய்து கொண்டார்.

இவர் கோயமுத்தூர் ஜில்லாவில் நெசவு இயந்திரம் வைத்து தன்னால் அந்தக்காரியம் நிர்வகிக்க முடியாமல், ஒரு ஐரோப்பியக் கம்பெனியாருக்குக் கொடுத்து, அவர்களுக்கு இதில் இலட்சக் கணக்கான ரூபாயும் தனக்கு இதில் பதினாயிரக் கணக்கான ரூபாயும் லாபம் வரும்படி ஏற்பாடு செய்து கொண்டு இருவரும் கூட்டுக் கொள்ளை அடிப்பதுபோல் பணம் சம்பாதிப்பதால் நமது ஜில்லாவிலுள்ள பதினாயிரக் கணக்கான கைநெசவுக்காரர்கள் பிழைப்பில்லாமல் நமது நாட்டை விட்டு நெட்டால், பினாங்கு, சிங்கப்பூர் போகவும், அங்கு போய் நாயிலும் கடையாய்த் தோட்டக்காரர்களால் நடத்தப்பட்டு பூச்சி புழுக்களைப்போல் சாகவுமாயிருக்கிறார்கள்.

இந்த நிலையில் ஸ்ரீமான் ஐயங்கார் தான் குடிசைத் தொழிலை ஆதரிப்பவரென்றும் கை நெசவை ஆதரிப்பவரென்றும் கைராட்டினத்தை ஆதரிப்பவரென்றும் சொல்லிக் கொள்ளுவதோடு, மகாத்மா சிஷ்யரென்றும் கதராடையை உடுத்துபவரென்றும் சொல்லிக்கொண்டும் ஆள்களை விட்டு சொல்லச் செய்தும், கிராமத்துக் குடியானவர்களின் ஓட்டு வாங்கப் பார்க்கிறார்.

இதனால் இவரின் கதரபிமானம் கசாப்புக் கடைக்காரன் ஜீவ காருண்ணிய சங்கம் ஏற்படுத்தினது போலவேயிருக்கிறது.

தவிர, பொது ஜனங்களுக்கு வேலை செய்வதற்காக அநேக ஸ்தாபனங்களில் மெம்பராகவும் பிரசிடெண்டாகவும் இருக்கிறதாகவும், அதற்காக உழைக்கிறதாகவும் சொல்லிக் கொள்ளுகிறார். தான் ஒரு பாங்கியில் பிரசிடெண்டாக யிருந்தால் தன் மருமகன் அதில் லீகல் அட்வைசராயிருக்க வேண்டும். மற்ற டைரக்டர்களுக்கு சிட்டிங் பீஸ் ஐந்து ரூபாயாகவிருந்தால் தனக்கு மாத்திரம் மீட்டிங் ஒன்றுக்கு சிட்டிங்பீஸ் இருபது ரூபாய் கொடுக்க வேண்டும். இவ்வளவுக்கும் தான் அதில் போட்டிருக்கும் பங்குத் தொகை ஆயிரம் ரூபாய்தானிருக்கும்.

இத்தனை லாபமுள்ள ஸ்தாபனங்களில் இருந்து கொண்டு, பொது நன்மைக்கு வேலை செய்வதாய்ச் சொல்லி, வாயில்லாப் பூச்சிகளின் ஓட்டு வாங்கத்தான் அப்பதவிகளை உபயோகிப்பது. அப்படி சிட்டிங் பீஸ் இருபது ரூபாய் வாங்கி நடத்தும் நடவடிக்கை என்னவென்று பார்த்தால், ஆள்களைக் கூட்டி வைத்துக் கொண்டு, தான் சட்ட சபையில் 'இது செய்தேன்' 'அது செய்தேன்' 'பருத்திச் செடி பிடுங்குவதை நிறுத்தினேன்' 'மேட்டூர் திட்டத்திற்குப் பாடுபட்டேன்' என்று சொல்லி, தன்னுடைய சட்ட சபை ஸ்தானத்திற்கு ஓட்டுப்பெறும் வழியைத் தவிர வேறு வேலை பார்ப்பதேயில்லை. இந்த ஓட்டுப் பிரசாரத்திற்கு பாங்கிக்காரர்கள் சிட்டிங் பீஸ் கொடுப்பதாயிருந்தால் ஐயங்கார் சாமர்த்தியத்தையும் நம்மவர்களின் இளிச்சவாய்த்தனத்தையும் என்னவென்று சொல்லுவது?

"பருத்திச் செடி பிடுங்குவதை நிறுத்தினதாக நமது ஸ்ரீமான் ஐயங்கார் சொல்லிக் கொள்வது பெரிய மோசடியான வார்த்தை. இதன் உண்மையை அறிய விரும்புவோர் ஸ்ரீமான் ஐயங்காரின் கூட்டு சட்ட சபை மெம்பர்களான ஸ்ரீமான்கள் டி. எ. இராமலிங்கம் செட்டியார். வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர் ஆகிய கனவான்களைக் கேட்டுப் பார்த்தாலே தெரியும்.

முதலாவது நமது ஐயங்காரை மந்திரிகள் மதிப்பதேயில்லை. ஐயங்கார் மந்திரிகளைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி சீட்டு அனுப்பினால், மந்திரிமார்கள் பார்ப்பதற்குக் கூட சந்தர்ப்பம் கொடுப்பதில்லை. ஏனென்றால் நமது மந்திரிமார்கள் மூவருக்கும் ஐயங்காரின் யோக்கியதை நன்றாய்த் தெரியும். ஐயங்கார் மந்திரிகளைக் காண வேண்டுமென்பது, அவர்களிடம் சென்று ஏதாவது வாயைப் பிடுங்கி இரண்டு வார்த்தை பேசி விட்டு வெளியில் போய், ஊர் ஜனங்களிடம் ஓட்டு வாங்குவதற்காக ஒன்றிருக்க ஒன்றை உளறித் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளுவதற்காகத்தான் என்பதை நன்றாய் அறிந்தே இவரை மந்திரிகள் அநேகமாய் பக்கத்தில் வர விடுவதில்லை; லக்ஷியமும் செய்வதில்லை. அநேக தடவைகளில் மந்திரிகள் ஐயங்காரைக் கண்டிக்கும் ஜாடையாகக் கூடப் பேசியிருக்கிறார்களாம். அதை உடனே மறந்து விட்டு மறுபடியும் போய் பல்லைக் காட்டுவாராம். இந்த நிலைமையில், பருத்திச் செடி பிடுங்குவதை ஐயங்கார் நிறுத்தி விட்டார் என்பது எவ்வளவு தூரம் வாஸ்தவமென்பதை வாசகர்கள்தான் உணர

வேண்டும. உண்மையில் பருத்திச் செடி விஷயத்திற்கும் ஐயங்காருக்கும் கொஞ்சமும் சம்பந்தமேயில்லை யென்று சட்டசபை மெம்பர்களும், மற்றும் அந்த இலாக்காவில் சம்பந்தப் பட்டவர்களுமே சொல்லியிருக்கிறார்கள். வாஸ்தவத்தில் இதில் சம்பந்தப் பட்டவர்கள் சுய மரியாதை உள்ளவர்களாய் இருப்பதால் இதை ஒரு பெருமையாக வெளியில் சொல்லிக் கொள்ளவே சங்கோஜப் படுகிறார்கள். அப்படியிருக்க நமது ஐயங்கார் சம்மன் இல்லாமல் ஆஜராவது போல் எந்தக் கூட்டத்தில் பேச ஆரம்பித்தாலும் "என் பெயர் என்ன தெரியுமா? பருத்திச் செடி. ஐயங்கார்" என்று தானே சொல்லிக் கொண்டுதான், மேற் கொண்டு சங்கதி போட ஆரம்பிப்பார். அது போல வேதான் மேட்டூர் திட்டத்திற்கும் மேல் பவானி திட்டத்திற்கும் நமது ஐயங்காருக்கும் உள்ள சம்பந்தம். அப்படி இருந்தாலும் நீர்ப்பாசான இலாகா மந்திரியான சர். சி. பி. இராமசாமி ஐயர் பார்ப்பனரானதினாலும், சட்ட சபைக்கு நிற்கும் இவரும்பார்ப்பனரானதினாலும்மற்ற மெம்பர்களும் பார்ப்பனரல்லாத கட்சியான ஜஸ்டிஸ் கட்சிக்கு விரோதிகளானதினாலும் இந்த மெம்பர்களின் பெயரைச் சொல்லி ஓட்டர்களுக்கு சிபார்சு செய்வது போல் பேசிப் போனார்.

இம்மட்டோடில்லாமல் பனகால் ராஜா நமது ஐயங்காரை ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலை வேண்டுமா என்று கேட்டதாகவும், ஐயங்கார் காங்கிரஸ் கொள்கைக்கு விரோதமானதால் வேண்டாமென்று சொல்லி விட்டதாகவும், இது ஒரு பெரிய தியாகம் போலவும், தான் காங்கிரஸ் கொள்கைக்குக் கட்டுப் பட்டதாகவும், தானே எழுதி, யாரோ ஒரு நிருபர் அனுப்பியது போல் பத்திரிகைகளுக்கு எழுதி விட்டார். இதன் யோக்கியதை என்ன வென்று விசாரிக்கப் போனால், பனகால் ராஜாவை ஸ்ரீமான் ஐயங்கார் பார்க்கப் போனதாகவும், பனகால் ராஜா ஐயங்காரைப் பார்த்து வேடிக்கையாய் "என்ன, ஐயங்காரே! என்ன விசேஷம்? ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலை வேண்டுமா?" என்று கேட்டதாகவும், ஐயங்கார் "சீ அந்தப்பழம் புளிக்கும்" என்று சொன்னதாகவும் கேள்வி. இந்த விஷயத்தை ஜஸ்டிஸ் பத்திரிகையும் வெளிப்படுத்தி விட்டது. ஒரு ஜில்லா போர்டு மெம்பர் வேலைக்கு பனகால் ராஜா வீட்டு வாசலில் காத்திருந்த நமது ஐயங்கார் "சுவாமிகளுக்கு" ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலை தானே வருவதாயிருந்தால், வேண்டாமென்று சொல்லியிருப்பாரா என்பதை வாசகர்களே நினைத்துப் பார்த்தால் விளங்காமல் போகாது. தவிர, சென்ற வாரம் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தர முதலியார் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் சார்பாக சட்ட சபைக்கு நிற்கும் அபேக்ஷகர்கள் பட்டமோ சர்க்கார் நியமன உத்தியோகமோ பெற்றவர்களாயிருக்கக் கூடாதென்றும், அப்படிப் பெற்றவர்கள் யாராவது இருந்தாலும் அவைகளை விட்டு விட வேண்டுமென்றும் ஒரு தீர்மானம் அனுப்பினார். இதைப் பார்த்த சிலர், அதாவது, ஸ்ரீமான்கள் ஒ. கந்தசாமி செட்டியார், நாகை கே. எஸ். வெங்கட்டராமய்யர் முதலியோர் தங்கள் ராவ் பஹதூர் பட்டத்தை வாபீஸ் செய்து விட்டார்கள். ஆனால் நமது ஐயங்கார் ஜில்லா போர்டு மெம்பர் ஸ்தானத்தை விட முடியாது என்று சொல்லி விட்டு, அதற்குக் காரணமாக பட்டத்தை விட வேண்டியது என்று காங்கிரஸ் தீர்மானிக்க வில்லையென்றும், பட்டத்தை விடுவது அவரவர்கள் இஷ்டத்தைப் பொறுத்ததென்றும், சென்னை மாகாண காங்கிரஸ் கமிட்டி தீர்மானித்திருக்கிறது என்றும், காங்கிரஸ் கட்சி சட்ட விதிகளுக்கு உட்படவேண்டுமென்றும், அப்பதவியினால் தனக்கு ஒரு பயனும் இல்லையென்றும்தான் ராஜிநாமா செய்துவிட்டால் காங்கிரசுக்குக் கெடுதி ஏற்படுமென்றும் ஜில்லா போர்டு மெம்பர் பதவியை விட முடியாது என்று சொல்லிவிட்டார். (இது 14-6-26-உ "சுதேச மித்திரன்" 6-வது பக்கம் 3-வது கலத்தில் வெளி வந்திருக்கிறது) இதிலிருந்து நமது ஐயங்காருக்கு சர்க்கார் நியமன உத்தியோகத்தில் எவ்வளவு "வெறுப்பு" இருக்கிறது என்பதை வாசகர்களே அறிந்துகொள்ளலாம். அல்லாமலும் சுயராஜ்யக் கட்சி திட்டத்தில் பட்டம் பதவி கூடாதென்றே இருக்கிறது. ஆதலால் கக்ஷி திட்டத்தையே மறைக்கும் நமது ஐயங்காரின் யோக்கிதையைத் தெரிந்து கொள்ள 'நமது கிராம ஜனங்களான ஓட்டர்களுக்கு சக்தியில்லாவிட்டால் அவர்களுக்கு ஓட் உரிமை கொடுப்பதினால் தேசத்திற்கு என்ன பிரயோஜனம்?

நாமிநேஷனில் வந்த ஒரு ஜில்லா போர்டு மெம்பர் வேலையை விட்டு விடுவதினால் காங்கிரசுக்கே பெரிய கெடுதி வந்துவிடும் என்று நமது ஐயங்கார் உண்மையாய்ப் பயப்பட்டிருப்பாரானால் "வலிய வந்த ஜில்லா போர்டு பிரசிடெண்டு வேலையை விட்டதில் காங்கிரசுக்கு எவ்வளவு கெடுதி யேற்படும்" என்பது நமது ஐயங்கார் புத்திக்குப் படாமல் போனது எவ்வளவு அறியாமை என்பதை யோசித்துப் பார்த்தால் ஐயங்கார் சட்ட சபை மெம்பர் வேலைக்குக் கொஞ்சங்கூட லாயக்கு இல்லாதவரென்பது ஒரு சிறு பையனுக்குக் கூட தெரியாமல் போகாது. காங்கிரசில் சர்க்கார் நியமன உத்தியோகம் விடுவது அவரவர்கள் இஷ்டம் என்று தீர்மானித்திருந்தால், ஒப்புக்கொள்ளுவதும் அவரவர் இஷ்டத்தைப் பொருத்ததாகத்தானே யிருக்கும். அப்படி யிருக்க மந்திரி இவருக்கு பிரசிடெண்டு வேலை கொடுப்பதாக சொல்வது உண்மையானால் ஒப்புக்கொள்ள இவருக்கு ஏன் இஷ்டமில்லை?

காங்கிரஸ் கட்சி சட்ட விதிகளுக்கு உட்படவேண்டியது அவசியமானதால் நியமனப் பதவியை விடமுடியாது என்றால் காங்கிரஸ் கட்சி சட்ட விதிகளில் எங்கேயாவது நியமன உத்தியோகத்தை விட வேண்டியதில்லை என்று கண்டிருக்கிறதா? அல்லாமலும் சுயராஜ்யக் கட்சிக்காரர் நியமன பதவியை வகிக்கலாமா அல்லாமலும் சமயம் நேர்ந்தபோதுதான் தனக்கு சர்க்காரால் கொடுக்கப்பட்ட உத்தியோகங்களை விடமுடியும் என்றால், ஸ்ரீமான்கள் ஒ. கந்தசாமி செட்டியார், கே. எஸ். வெங்கட்டராயய்யர் ஆகியோர் ஆயுள் வரை வகித்திருக்கக் கூடிய ராவ் பஹதூர் பட்டங்களையே விட சந்தர்ப்பம் வந்திருக்கும்போது, நமது ஐயங்காருக்கு இன்னும் நாலைந்து மாதத்திற்குள் காலியாகப் போகிற ஜில்லா போர்டு மெம்பர் ஸ்தானத்தை விட சமயம் வாவில்லையா? ஐயங்கார் அகராதியில் சமயம் என்பதற்கு அர்த்தம் தானே காலாவதியாகி ஐயங்கார் பெயரை ஜில்லா போர்டு மெம்பர் பதவி ஜாப்தாவிலிருந்து சிவப்பு மையால் அடிப்பதுதான் போலிருக்கிறது. நமது ஜில்லாவின் தலையெழுத்து இப்படிப்பட்ட "கண்ணியமும் தர்ம சிந்தையும் காங்கிரஸ் கட்டுப்பாட்டிற்கு அடங்கின கனவான்கள்" நமது பிரதிநிதியாக சட்ட சபைக்குப் போகும் பாத்தியமும், அவரை சட்ட சபைக்கு அனுப்பஓட்டு செய்யும் பாக்கியமும் நமக்குக் கிடைத்திருப்பதை நினைத்தாலே நாம் சுயராஜ்யத்திற்கு எவ்வளவு தூரம் அருகா்கள் என்பதும், நம்மிடம் எவ்வளவு சீக்கிரத்தில் சுயராஜ்யம் வரும் என்பதும்; தானாகவே விளங்கும். ஆதலால் குடியான மகாஜனங்களே! ஓட்டுத் தாகர்களைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள்.

கோவைக் கொங்கன்.

திரு. சிரஞ்சன்.

சென்ற ஆண்டில் விண்ணவர்க்கு விருந்தினராய்ச் சென்ற தேசபந்து சித்தரஞ்சன தாஸரின் அருமையான ஏக புதல்வன் திரு. சிரஞ்சன தாஸர் கடந்த ஜூன் மாதம் 26-உ இறைவன் திருவடி நிழலெய்தினார் என அறிய நாம் பெரிதும் வருந்துகின்றோம். செந்திரு. வசந்தா தேவியார் தன் பதியை இழந்த ஓராண்டிற்குள், 22-வயது கொண்ட இளங்காளையான தன் அரும் பாலனை இழக்க நேரிட்டது பற்றி நாம் அளவிறந்த துக்கமடைகின்றோம். இவ்விளைஞர் தன் பெறற்கரிய தந்தையுடன், ஒத்துழையாமை ஓங்கி நின்ற காலத்தில், சிறைக் கோட்டம் நண்ணிய சிரோன்மணியாகும். 'பட்ட காலிலே படும்' என்பதற்கிலக்காய் தன் கணவனை இழந்த துக்கத்தால் மனம் நொந்திருக்கும் காலத்தில், தன் புதல்வனைப் பறி கொடுத்து துக்கம் அதிகரிக்க நேர்ந்த திருச்செல்வி வசந்தா தேவிக்கு நமது அநுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

பிழை திருத்தம்.

இவ் விதழில் 4-ம் பக்கத்தில் இரண்டாம் கலம் 51-வது வரியில் தொடங்கும் வாக்கியமான "என்னுடைய தேசத்தார் ஒரு அரசாங்கத்தின் கீழ் இருப்பதால் அந்த தேசத்தின் உரிமையைக் காப்பாற்றிக்கொள்ள முடியாவிட்டால்" என்பதின்கீழ் "எதற்காக அந்த தேசத்தைப்பற்றி" என்பதற்கு பதிலாக "எதற்காக அந்த அரசாங்கத்தைப் பற்றி" என்று திருத்தி வாசித்துக்கொள்ள வேண்டுகிறோம். ப-ர்.

பூனா பார்ப்பனரல்லாதார் கட்சி.

கனம் பனகால் ராஜா, திரு. எ. இராமசாமி முதலியாருடன் சிம்லா சென்றிருக்கிறார். கனம் பனகால் ராஜாவுக்கு 7-ம் தேதி உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்க பூனா பார்ப்பனரல்லாதார் கட்சியினர் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

பொய் புகன்றது யார்?

—(o)—

திரு. சீனிவாசய்யங்காருக்கு 12 கேள்விகள்.

"சத்தியாக்கிரகி"யின் குற்றப் பத்திரிகை.

திரு. எஸ். சீனிவாசய்யங்காருக்குப் பதில் சொல்லும் முகத்தான், எல்லூரிலிருந்து வெளிவரும் "சத்தியாக்கிரகி" என்ற பத்திரிகையானது, "திரு. எஸ். சீனிவாசய்யங்காரின் மூட்டை" என்று 21—6—26-ம் தேதி தலையங்கம் ஒன்று எழுதியிருக்கிறது. அதில் திரு அய்யங்கார் உத்தியோக மறுத்தலை எடுத்துவிட சம்மதித்துள்ளார் என்று முன் எழுதியதை திருப்பித் இப்போதும் எழுதியிருக்கின்றதாவது:—

திரு. எஸ். சீனிவாசய்யங்கார் சென்னைக் கடற்கரையில் 16-6-26-ம் தேதி பேசுகையில் ஆந்திர தேசத்திலிருந்து "சத்தியாக்கிரகி" பொய்யைப் பரவச் செய்து வருகிறதென்று சொன்னார். அவர் உத்தியோக மேற்றுக்கொள்வதை ஒன்றுமே ஆதரித்ததில்லை யென்று மறுத்தார். "சத்தியாக்கிரகி"யும் பிற ஆந்திரப் பத்திரிகைகளும் அதிகார வர்க்கத்துக்கு அனுசரணையாகக் கிளர்ச்சி செய்து வருவதாகப் புகார் செய்யவும் கர்வங் கொண்டார். ஆனால் 3-5-26-ம் தேதி நாம் அவரை நமது பத்திரிகையின் மூலமாகக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொல்லவேயில்லை. அவர் பதில் சொல்லியிருந்தால், உண்மை வெளிப்பட்டிருக்கும். அவர் இவ்வாறு மறைவாய்த் தூற்றுவதற்கும், நமது கேள்விகளுக்குப் பதிலாக என்னென்னவோ சொல்வதற்கும் ஏதோ மர்மமிருக்கவேண்டும். நாம் அவருடைய சூழ்ச்சியை வெளியிட்டது அவருக்குக் கோபம் வந்துவிட்டது போலும். உத்தியோக மறுப்பை எடுத்துவிட அவர் விரும்புவதாக பல தடவைகளில் சொல்லியிருக்கிறார் என்பது உறுதியே. அவ்வாறு சொன்னதை இப்போது அவர் ஏன் மறுக்கவேண்டும் என்று நாம் அறிய முடியவில்லை. அவர் ஒருவரை வஞ்சிக்கக்கூடாது. சுயராஜ்யக் கட்சித் தலைவர் என்பதனால் ஞாபக சக்தி குறைந்துவிடவேண்டுமென்பதல்ல. அவர் இதைப்பற்றி எல்லாவற்றையும் மறந்துவிட்டாரென்றே நினைத்துக்கொண்டு, அவருக்கு மறுமுறையும் ஞாபக மூட்டுவதற்காக அவர் விடையிறுக்கும்பொருட்டு கீழ்கண்ட கேள்விகளைக் கேட்போம்.

1. மார்ச் மாதம் 3, 4-ம் தேதிகளில் திரு. அய்யங்காருக்கும் சென்னை சட்ட சபையிலுள்ள தேசிய வாதிகளுக்கும் இடையில் மகாநாடு நடைபெற்றதா இல்லையா?

2. அந்த மகாநாட்டில் திரு. அய்யங்கார் உத்தியோகமேற்றுக் கொள்ளவேண்டுமென்ற விஷயத்தை ஆதரிக்க வில்லையா?

3. காங்கிரசில், உத்தியோக மேற்றுக் கொள்ளலை ஆதரித்தும் எதிர்த்தும் இரு கட்சிகள் இருக்கவேண்டுமென்று திரு. அய்யங்கார் வக்கீல் என்ற முறையில் சொல்ல வில்லையா?

4. மார்ச்சு மாதம் 18, 19-ம் தேதிகளில் திரு. அய்யங்காருக்கும் சென்னை சட்ட சபையிலுள்ள தேசியக் கட்சியினர்களுக்குமிடையில் இன்னொரு மகாநாடு நடைபெற வில்லையா?

5. அந்த இரண்டாவது மகாநாட்டில் திரு. அய்யங்கார் டெல்லியிலிருந்து திரும்பிய பின்னர் சென்னைத் தேசிய வாதிகளிடம் பரஸ்பர ஒத்துழைப் பாளர்களுடன் பம்பாயில் கலந்து பேசியதாகவும் அவர்கள் மந்திரி பதவிகளைத் தவிர மற்றப் பதவிகளை ஏற்றுக்கொள்ள விரும்பாதிருந்தால் அவர்களுடைய திட்டத்தை ஒப்புக்கொண்டிருக்கக் கூடுமென்றும் சொல்லவில்லையா?

6. தேர்தலுக்குப் பின் உத்தியோகங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதால் சென்னை சட்ட சபைத் தேர்தலுக்கு அனுபவமுள்ளவர்களையே நிறுத்தவேண்டுமென்று அம் மகாநாட்டில் திரு. அய்யங்கார் சொல்ல வில்லையா?

7. சபர்மதியிலுள்ள குஜாராத் வித்தியா பீடத்தில் 5-5-26-ம் தேதியன்று திரு. அய்யங்கார், அவர் அதற்கு முன்னாளிரவு பதவி மறுத்தலை ஆதரித்துப் பேசியதைப்பற்றி ஒரு பிரபல தேசிய வாதியிடம் அபிப்பிராயங் கேட்கவில்லையா?

8. அத்தேசியவாதி திரு. அய்யங்கார் அந்தரங்கத்தில் பதவி யேற்றுக்கொள்வதை ஆதரித்தும், வெளியில் எதிர்த்தும் பேசியதைக் குறித்து ஆச்சரியத்தைத் தெரிவிக்க வில்லையா?

9. அதற்கு விடையாக திரு. அய்யங்கார் "எனக்கு அதிகாரத்தைக் கொடுங்கள். நான் அசாமில் எல்லாவற்றையும் சீர்படுத்தி விடுகிறேன்" என்று தேசிய வாதியிடம் சொல்ல வில்லையா?

10. தேர்தலுக்கு முன்பாகவே வெளியிட்டுவிடாமல், தேர்தலுக்குப் பின்னர் உத்தியோக மேற்றுக்கொள்வது நேர்மையல்லவாதலாலும் அரசாங்கத்தாரி னுதவியால் ஒத்துழைப்பாளர்கள் பல சட்ட சபைகளிலும் பெரும் பான்மையாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு விடுவார்களாதலாலும், திரு. அய்யங்காருடைய முறைகள் சரியல்லவென்று அந்தத் தேசிய வாதி திரு. அய்யங்காரிடம் தெரிவிக்கவில்லையா?

11. டெல்லியில் நடந்த அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் 4-வது தீர்மானத்தின் (பி) பகுதியிலுள்ள விதியின்படி திட்டத்தை மாற்றிக்கொள்ளலா மென்றும் அசாம் காங்கிரசில் பதவி யேற்றலை யனுமதிக்கவே அவ்விதி சேர்க்கப்பட்டதென்றும் திரு. அய்யங்கார் தெரிவிக்கவில்லையா?

(விதி:—"1926-ம் ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெறும் காங்கிரசில் நிறைவேற்றப்படும் விதிகளுக் குட்பட்டு")

12. உத்தியோகங்களை யேற்றுக் கொள்ளும் திட்டமானது காங்கிரசின் உறுதிமொழிக்கு மாறுணதல்லவென்றும், அத் திட்டம் காங்கிரசின் கட்டளையையே நிறைவேற்றுவதாருமென்றும் திரு. அய்யங்கார் தெரிவிக்க வில்லையா?

திரு. அய்யங்கார் சொன்னதாகக் கூறப்படும் இன்னும் பலவற்றை நாம் இங்கு குறிப்பிடாமல் விட்டு விட்டோம். நாம் இங்கு குறிப்பிட்டுள்ள விவகாரங்களிலிருந்தே திரு. அய்யங்கார் உத்தியோக மேற்றுக்கொள்வதற்கு எதிரிடையாயிருக்க வில்லை யென்பது வெளியாகிறது. 'சத்தியாகிரகி' தனக்குத் தெரிந்தவரை உண்மையையே வெளியிடுகிற தென்பதை இப்போதாவது திரு. அய்யங்கார் உணருவாரா? அல்லது சென்னையின் மாஜி அட்வகேட் ஜெனரல் வெளிப்படையான உண்மைகளை [illegible] கப்போகிறாரா? அவர் மறுப்பதானால் நாம் திரு. அய்யங்கார் மீது சொல்லுவதை இன்னும் நிரூபிக்கும் [illegible] மற்ற விஷயங்களையும் பிரசுரிக்கத் [illegible]ம்.

சட்ட சபையை விட்டு வெளி வந்த "வீரர்"களின் செய்கை.

சட்ட சபையில் ஒரு பலனும் இல்லை என்றும் சட்ட சபையிலிருந்துகொண்டு சர்க்காரை எவ்வளவு கெஞ்சிக் கூத்தாடியும் சர்க்கார் மனம் கொஞ்சமாவது இளகவில்லை என்றும் ஆதலால் இனி சட்ட சபையிலிருப்பது அவமானம் என்றும், இந்த சர்க்காரின் யோக்கியதையை எடுத்து வெளியில் சொல்லப் போகிறோம் என்றும் வீரப் பிரதாபம் பேசிவிட்டு வெளியில் வந்த "வீரர்கள்" என்ன செய்கிறார்களென்று பார்த்தால், மறுபடியும் சட்ட சபைக்குப் போக ஓட்டர்களிடம் போய் எங்களை சட்ட சபைக்கு அனுப்பினால் நாங்கள் உங்களுக்கு சாதித்து விடுகிறோம் என்று தட்டுப் பிச்சை எடுத்துக்கொண்டு திரிகிறார்கள்.

இம்மட்டோடு நிற்கிறார்களா வென்று பார்த்தால் வீரப் பிரதாபம் பேசி, விட்டு விட்டுவந்த சட்ட சபைக்கு அடுத்த கூட்டத்திற்கே போகிறார்கள். ஒரு கூட்டத்தின் பிரயாணப் படியை வாங்காமல் இருப்பதற்கு நமது "வீரர்"(?)களுக்கு மனம் வரவில்லை. இதை அறிந்து, "அகில இந்திய ஒப்பற்ற தலைவர்"(?) திரு. சீனிவாசய்யங்கார் போகும்படி உத்திரவு கொடுத்துவிட்டார்; அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசி திரு. எ. ரெங்கசாமி ஐயங்கார் மேல்ஒப்பம் போட்டுவிட்டார்; ஆகையால் சென்னை, கல்கத்தா, பஞ்சாப், அஸ்ஸாம் முதலிய மாகாண சட்ட சபைகளுக்குப் போய்த் தீர வேண்டும். அங்கு போய் செய்யவேண்டிய பல முக்கியமான வேலைகள் இருக்கின்றன. நாங்கள் போகாவிட்டால் அநேக காரியம் கெட்டுப்போகும். போகாமல் நின்றுவிட்டால் ஓட்டர்களை ஏமாற்றி மோசம் செய்தது போலாகிவிடும். ஆதலால் போகிறோம்" என்ற நொண்டிச் சமாதானத்துடன் சட்ட சபைக்குள் செல்லுகின்றார்கள்.

இதில் ஏதாவது கடுகளவாவது நாணயமேனும் யோக்கியப் பொறுப்பேனும் இருக்கிறதா? சட்ட சபையில் இவர்கள் போய் செய்யவேண்டியவை பல வேலைகளிருக்குமானால், ஏன் அதில் ஒன்றும் செய்ய முடியாது என்று வெளியில் வரவேண்டும்? சர்க்காரைக் கெஞ்சியும் கூத்தாடியும் கேட்டும் ஒன்றும் செய்யமுடியாத காரியத்தை சர்க்காருடன் கோபித்துக்கொண்டு வீரப் பிரதாபம் பேசிவந்துவிட்டுத் திரும்பவும் போனால் சர்க்கார் இவர்களை எப்படி மதிப்பார்கள்? இவர்கள் கோருவதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? சட்ட சபையை

(இதன் தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க.)



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே

குடி அரசு.

அக்ஷய-ஹூ ஆனி-மீ 20 உ

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி.

—:o:—

சென்னையில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் வீட்டில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் நிர்வாகக் கூட்டத்தின் நடவடிக்கைகள் இவ்வாரப் பத்திரிகைகளில் வெளியானதை நண்பர்கள் வாசித்திருக்கலாம். ஆனால் அதில் நடந்த விஷயங்களை ஒவ்வொரு பத்திரிகை ஒவ்வொரு விதமாய் தத்தம் சௌகரியப்படி பிரசுரித்திருக்கின்றன.

ஸ்ரீமான் கலியாணசுந்தர முதலியாரின் தீர்மானமானது ஒரே அடியாய் தூக்கி அடிக்கப்பட்டு உயிர் வாங்கப்பட்டுப் போயிற்று. அதாவது "காங்கிரசால் சட்ட சபைக்கு நியமிக்கப்பட்ட அபேக்ஷகர்கள் பட்டதாரியாகவாவது அரசாங்க நியமனம் பெற்றவர்களாகவாவது இருப்பரேல், பட்டத்தையும் நியமனத்தையும் விட்டுவிடும்படியும் கதருடையில் பற்றுக் கொள்ளும்படியும் தீர்மானிக்கிறது" என்பதே ஸ்ரீமான் முதலியார் தீர்மானத்தின் தத்துவம். அப்படியிருக்க, திருத்தப் பிரேரேபணையாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தியால் இம் மாதிரி தீர்மானமே கொண்டுவர ஒழுங்கில்லை யென்றும்,—ஆனால் ஸ்ரீமான் முதலியார் தங்களுக்கு ஓட்டுப் பிரசாரம் செய்யவும் முதலியார் வேலைவிற்று தாங்கள் ஓட்டுப் பெறவும் அவருடைய தயவு வேண்டியிருப்பதால் அவரை ஏமாற்று முகத்தான் ஏதாவது சமாதானம் சொல்ல வேண்டுமே யென்றும், இல்லாவிட்டால் முதலியார் தனக்கு ஏதாவது அவமானம் வந்துவிடுமே யென்று கருதிவிலகிவிடுவாரோ என்னமோ என்றும், பயந்து ஸ்ரீமான் முதலியார் கண்களைத் துடைப்பதுபோல் ஒரு பொக்கித்தீர்மானம் திருத்தப்பிரேரேபணையாகத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதாவது "காங்கிரசின் கொள்கைப்படி பட்டம் விட வேண்டிய அவசியமில்லாவிட்டாலும் யாராவது பட்டதாரிகள் அபேக்ஷகர்களாயிருந்தால்காங்கிரசின் கௌரவத்தைக் காக்க தங்கள் பட்டங்களை விடுவார்கள் எனவும் கதர் கட்டுவார்கள் எனவும் எதிர் பார்க்கப்படுகிறது" என்பதேயாம்.

ஸ்ரீமான் முதலியார் எந்த கருத்துடன் தனது தீர்மானத்தைப் பிரேரேபித்தாரோ அதற்கு நேர் விரோதமாகத் தீர்மானிக்கப் பட்டுப்போயிற்று. முதலாவது, முதலியாரின் கருத்து பட்டம், நியமனப்பதவி இரண்டையும் துறக்க வேண்டுமென்பது. நியமன பதவியைப்பற்றிப் பேசினால் ஸ்ரீமான் சி. வி. வெங்கட்டரமணய்யங்காரை பாதிக்குமானதால் அதை அடியோடு விட்டுவிடப் பட்டது. இதைப்பற்றி ஸ்ரீமான் முதலியாருக்கு இப்போது ஒரு ஆக்ஷேபணையும் இல்லாமல் போனதின் இரகசியம் நமக்கு விளங்கவில்லை.

இரண்டாவது, பட்டங்களை விடவேண்டியது என்ற தீர்மானம் கொண்டுவரும்போது நமது முதலியாரவர்கள், "பட்டம் பதவியுடையவர்கள் அவைகளை விட்டுவிடுவார்கள் என்று எதிர் பார்த்தேன். அவர்கள் விடாததால் இத் தீர்மானம் கொண்டுவந்தேன்" என்று சொன்னதோடு, ஸ்ரீமான் சீனிவாசய்யங்காருக்கு எழுதிய பகிரங்கக் கடிதத்தில்,

"இப்பொழுது நாம் வழ வழ வென்று இருப்போமாயின் பின்னால் வருந்த நேரும். இப்பொழுதே எச்சரிக்கையாயிருத்தல்வேண்டும். கட்டுப்பாடுகளைத் தளர விட விட நமது கட்சியின் ஆக்கம் குன்றுவது திண்ணம். காங்கிரசில் ஒத்துழைப்பு நுழையாதவாறு காத்தல் வேண்டுமென்னுங் குறியோடு தங்களுடன் சேர்ந்து உழைக்கின்றேனே யன்றி வேறு எக்குறியோடும் உழைக்கின்றேனில்லை,"——என்று வீர உரை நிகழ்த்திய நமது ஸ்ரீமான் முதலியார் வழ வழத்ததும் எச்சரிக்கை யற்றதும் கட்டுப்பாடுகளைத் தளரவிட்டதும் தமது கட்சியின் ஆக்கம் குன்றக்கூடியதும் காங்கிரசில் ஒத்துழைப்பு நுழையும்படியான தீர்மானத்தை ஒப்புக்கொண்டதும், பட்டத்தை இழித்துக் கூறியவர், பட்டதாரிகளையும் நியமனதாரிகளையும் உடைய அமைப்பிற்கு தான் ஒரு பிரதான, அதாவது, தேர்தல் வேலைக்கு ஏற்பாடு செய்யவும் அவற்றை மேற்பார்வை பார்க்கவும் நியமிக்கப்பட்ட கமிட்டி அங்கத்தினராகவும் இருக்க ஒருப்பட்டதின் இரகசியம் நமக்கு விளங்கவில்லை. இனி அவர் எக்குறியோடு அய்யங்காருடன் சேர்ந்துழைக்கிறார் என்பதும் நமக்கு விளங்கவில்லை.

ஒரு சமயம் ஸ்ரீமான் முதலியார் அவர்கள் தான் ஏற்றுக்கொண்ட திருத்தத்தில் தனது மேற்கண்ட, கருத்து முழுவதும் பொதிந்து விளங்கக் காண்கின்றாரோ என்பதும் நமக்கு விளங்கவில்லை. எனினும் சீக்கிரத்திலாதல் தெரிந்துவிடுமென்றே நினைக்கின்றோம்.

இரண்டாவதாக, டாக்டர் வரதராஜுலு நாயுடுகாரின் இராஜிநாமாவைப் புனராலோசனைக்குத் திருப்பி அனுப்பப்பட்டதென்றும் அறிகிறோம். ஸ்ரீமான் முதலியாரின் பிரேரேபணையின் பேரில் பிறந்த விரோதமான திருத்தத்தை அவர் ஒப்புக்கொண்டது போலவே டாக்டர் நாயுடுகாரின் ராஜிநாமாவும் வாபீஸ் வாங்கிக்கொள்ளப்படுமென்றே நினைக்கிறோம்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தியின் தீர்மானத்தையே ஸ்ரீமான் முதலியார் ஒப்புக்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கும்போது, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி கொஞ்ச நாளாய் டாக்டர் நாயுடுகாரின் பக்கத்திலேயே இருப்பதால் ராஜிநாமாவை வாபீசு பெறும்படி நேருவது முடியாதகாரியம் என்பதாகத் தோன்றவில்லை. இதைப்பற்றியும் பல திறப்பட்ட வர்த்தமானங்கள் அடிபட்டுக்கொண்டிருக்கின்றன. முடிவைப் பொறுமையோடு எதிர்பார்ப்போம்.

மூன்றாவதாக ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரை தூக்கில்போட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அதாவது,"ஸ்ரீமான் நாயக்கர் காங்கிரசுக்கு விரோதமான பிரசாரம் செய்து வருவதால் அவரை காங்கிரஸ் காரியக் கமிட்டியிலிருந்து விலக்கவேண்டும்" என்று தீர்மானங்கொண்டுவரப்பட்டது. இது ஸ்ரீமான்கள் ஒரு பாவலரால் பிரேரேபிக்கப்பட்டு, ஒரு சாயபினால் ஆமோதிக்கப்பட்டு, ஒரு முதலியாரால் ஆதரிக்கப்பட்டு ஒரு பிள்ளையால் தாங்கப்பட்டது.

ஸ்ரீமான் நாயக்கர் மீது கண்டனத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதைப் பற்றி நமக்குக் கவலையில்லை. இந்த விஷயத்திலாவது நமது ஐயங்கார்கள் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுத்தார்களே; அதுவே நமக்கு மிகவும் சந்தோஷம், ஆனால் இத் தீர்மானத்தை ஆமோதித்தல் ஆதரித்தல் விஷயத்தில், ஒரு பார்ப்பனருக்கும் இதில் பிரதிநிதித்துவம் கிடைக்காமல் போனது பற்றியே வருத்தப்படுகிறோம். இதுவும் அவர்களாகவே வேண்டாமென்று சொல்லியிருப்பார்களே ஒழிய ஆசைப்பட்டிருந்தால் கிடைக்காமல் போயிருக்காது. ஆனாலும் தீர்மானத்தின் நிலை என்னவாயிற்று என்று பார்த்தால், அது அடியோடு ஒழியும் நிலையில் இருந்ததால் மிக்க தந்திரமாய் ஒரு செட்டியாரை திருத்தம் கொண்டு வரச் செய்து, ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டு அக்கமிட்டியே விசாரித்து அறிக்கையனுப்பத் தீர்மானித்திருப்பதாய்த் தெரிகிறது. அக்கமிட்டியிலாதல் பார்ப்பனருக்குப் பிரதிநிதித்துவம் கிடைத்திருக்கிறதென்பதை அறிந்து சந்தோஷிக்கிறோம். ஆனால் பார்ப்பன மித்திரனால் "சுதேசமித்திரனி"ல், அக்கமிட்டிக்கே நாயக்கரை தூக்கில்போடும் உரிமையும் அளித்திருப்பதாய்க் காணப்படுகிறது.

இதன் முடிவை ஸ்ரீமான் நாயக்கர் - முதலாவது சார்லஸ், வாரன் ஹேஸ்டிங்ஸ், லார்டு கிளைவ் இவர்களில் எவருக்காவது ஏற்பட்டது போல் நடக்குமோ அல்லது ருஷியா சக்கிரவர்த்தியான ஸார் சக்கிரவர்த்திக்கு நேர்ந்ததைப்போல் நடக்குமோ என்பதைத் துணிவுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறாரே யல்லாமல் இந்தூர் அரசர் போல் கமிட்டிக்குப் பயந்து கொள்ளவில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஏனெனில் இவ்வய்யங்கார்களுக்கு நல்ல பிள்ளையாகி அவர்கள் பின்னால் திரிந்து உயிர் வாழ்வதைக் காட்டிலும் அவர்களால் "சிலுவையில் அறையப்படுவதை"யே மேல் எனக் கொள்ளுகிறோம்.

"சுதேசமித்திர"னின் பித்தலாட்டம்.

சென்ற இதழ் "குடி அரசி"ல் திரு. டி. எ. இராமலிங்கம் செட்டியார் அவர்கள் சுய ராஜ்யக் கட்சியிலிருந்து விலகுகிறார் என்பதாக வரைந்திருந்த விஷயத்தை வாசகர்கள் கண்ணுற்றிருக்கலாம். அதைப் பார்த்தவுடன் பார்ப்பனர் கூலியாய சுயராஜ்யக் கட்சிக்குப் பேராபத்து வந்து விட்டதெனக் கருதி "குடி அரசின் கட்டுக் கதை,—ஸ்ரீமான் இராமலிங்க செட்டியாரின் மறுப்பு" என்ற தலைப்பில் "சுதேசமித்திரன்" ஒரு மறுப்பு எழுதியிருக்கிறது.

அதில் திரு. டி. எ. இராமலிங்கம் செட்டியாரவர்கள் "மித்திரன்" நிருபரிடம் கூறுவதாக எழுதியிருக்கும் விஷயங்களைக் கவனித்துப் பார்த்தால் "குடி அரசு" விஷயம் கட்டுக் கதையா, "சுதேசமித்திரன்" விஷயம் அயோக்கியத்தனமா என்பது புலனாகும். திரு. செட்டியார் மறுப்பு கூறுவதாவது:—

"என்னுடைய அபிப்பிராயம் எதுவும் மாறவில்லை. நான் சுயராஜ்யக் கட்சி அங்கத்தினராக இருந்ததே இல்லை. "பார்ப்பனரல்லாத கட்சி" என்பது ஜஸ்டிஸ் கட்சியைக் குறிப்பிடுவதானால் அதன் சார்பாக நான் தேர்தலுக்கு நிற்கப் போவதாக எவரிடமும் சொல்லவேயில்லை. உத்தியோகங்களை ஏற்றுக் கொள்ளுவதன் சம்பந்தமாக நான் எவ்வித அபிப்பிராயம் கொண்டிருக்கிறேன் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. உத்தியோகம் ஏற்றுக் கொள்ளும் விஷயத்தில் வைதிக காங்கிரஸ் காரர்களுக்கும் (தங்கள்) தேசியக் கட்சியினருக்கும் அபிப்பிராய பேதமிருந்த போதிலும் நாட்டில் ஒற்றுமை ஏற்பட வேண்டு மென்னும் நோக்கத்துடன் காங்கிரஸ் அபேக்ஷகர்களாக நிற்க சம்மதித்தோம். பகிஷ்காரத் தீர்மானங்களை வாபீசு வாங்கிக் கொண்டு நாடு சட்ட மறுப்புக்குத் தயாராயில்லாததால் அதை ஆரம்பிப்பதில்லை என்று காங்கிரஸ் தீர்மானம் செய்ததால் இதற்கு நாங்கள் கட்டுப்பட முடிந்தது. இதன் பிறகு நாட்டின் கட்சிகளின் நிலைமையும் தனிப்பட்ட நபர்களின் அபிப்பிராயமும் அடிக்கடி மாறி வருவதால் தேசிய வாதிகள் (தாங்கள்) அடிக்கடி தங்கள் நிலைமையைப் பரிசீலனை செய்ய உரிமை பெற்றிருக்கிறார்கள். தேசிய வாதிகளில் சிலர் பரஸ்பர ஒத்துழைப்பு மனோபாவம் கொண்டவர்கள் என்பதில் சந்தேகமில்லை. தேசிய வாதிகள் (தாங்கள்) ஜூலை மாதம் சட்ட சபைக் கூட்டக் காலத்தில் கூடி யோசனை செய்யும் வரையில் தற்கால ராஜ்ய நிலைமை சம்பந்தமாக எப்படி நடந்து கொள்வார்களென்று தற்பொழுது கூற முடியாது".

என்று இவ்வாறு திரு. இராமலிங்கம் செட்டியார் சொன்னதாக எழுதியிருக்கிறது. "மித்திரன்" நிருபர் எழுதியதில் எவ்வளவு புரட்டு, பித்தலாட்டம் இருக்கும் என்பதை மறந்து, "மித்திரன்" கூற்றை அப்படியே எடுத்துக்கொண்டு பார்ப்போம்.

திரு. இராமலிங்கம் செட்டியார் சுயராஜ்யக் கட்சியை விட்டு விலகி விட்டதாக திரு. செட்டியார் சொன்னார் என்று "குடி அரசு" நிருபரிடம் திரு. வெரிவாட செட்டியார் கூறினதாக "குடி அரசு" எழுதுகிறது. ஆனால், திரு. இராமலிங்கம் செட்டியார் தான் ஒரு நாளும் சுயராஜ்யக் கட்சியில் சேரவேயில்லை என்று சொன்னதாக "மித்திரன்" நிருபர் எழுதியிருப்பதாக 'மித்திரன்' பிரசுரித்திருக்கிறது. இவ்விரண்டிற்கும் உள்ள வித்தியாசம் என்ன? பின்னும் திரு. செட்டியார் சொன்னதிலிருந்து, இது வரை சுயராஜ்யக் கட்சி பார்ப்பனர்கள் தங்கள் கட்சியில் திரு. இராமலிங்கம் செட்டியார் திரு. வெள்ளியங்கிரி கவுண்டர் முதலியவர்கள் சேர்ந்திருப்பதாய்ச் சொல்லிக் கொண்டது முழுப் பொய்யென்று இப்போது விளங்குகிறது. கோபியில் திரு. நாயக்கர் பேசும் போது சுயராஜ்யக் கட்சியில் வகுப்பு நம்மையை கவனிக்காத யோக்கியமான பார்ப்பனரல்லாதார் யாராவது இருக்கிறார்களா என்று கேட்ட போது, உடனே ஒரு ஐயங்காரும் ஒரு ஐயரும் எழுந்து "திரு. இராமலிங்கம் செட்டியார் இருக்கிறாரே, அவர் யோக்கியமானவரல்லவா," என்று கேட்டார்கள். அதற்கு திரு. நாயக்கரவர்கள், "உத்தியோகம் ஒப்புக் கொள்ளும் நிபந்தனையின் பேரிலேயே யிருக்கிறார்களே யல்லாமல் சுயராஜ்யக் கட்சி நிபந்தனையின்படி இல்லை" யென்றும் இதை செட்டியாரே தன்னிடம் கூறியிருப்பதாகவும், கூறினார். அதுவும் இப்போது ருஜுவாகி விட்டது.

தவிர, திரு. இராமலிங்கம் செட்டியார் பார்ப்பனரல்லாதார் சார்பாய் சட்ட சபைக்கு நிற்கப் போவதாய்ச் சொன்னதாக அறிகிறோம், என்று "குடி அரசி"ல் எழுதியிருக்கிறது. அதற்குப் பதிலாக பார்ப்பனரல்லாதார் கட்சி என்று ஜஸ்டிஸ் கட்சியைச் சொல்லுவதானால் மாத்திரம் பார்ப்பனரல்லாதார் சார்பாய் தேர்தலுக்கு நிற்பதாய் சொல்லவில்லை யென்றே சொல்லுகிறார். இதனால் "ஜஸ்டிஸ் கட்சி" யல்லாத பார்ப்பனரல்லாத கட்சியின் சார்பாக நிற்பதாய்ச் சொன்னதாக நன்றாய் வெளியாகிறது. ஒரு சமயம் தஞ்சையில் கூடிய தேசியப் பார்ப்பனரல்லாதார் சார்பாக நிற்பதாய் வைத்துக் கொண்டாலும் "குடி அரசு" க்கு இது "மறுப்பு" என்பதாய் எழுதக் காரணமேயில்லை.

திரு. டி. எ. இராமலிங்கம் செட்டியார் பார்ப்பனரல்லார் கட்சியின் சார்பாக நிற்பதாகவே திரு. வெரிவாட செட்டியார் "குடி அரசு" பிரதி நிதியிடம் சொல்லியிருக்கிறாரே தவிற, ஜஸ்டிஸ் கட்சியின் சார்பாக நிற்பதாகச் சொன்னார் என்று எழுதவேயில்லை.

தவிற, திரு. சீனிவாசய்யங்கார் உடன்படிக்கைப்படி நடந்து கொள்வார் என்கிற நம்பிக்கை தனக்கு (டி. எ. இரா. செட்டியாருக்கு) இல்லை என்று சொன்னதாக நமது பிரதி நிதி எழுதியிருக்கிறார். திரு. இராமலிங்கம் செட்டியாரும் அதை ஒப்புக் கொள்ளுகிறார். அதாவது, நாட்டில் கட்சிகளின் நிலைமையும் தனிப்பட்ட நபர்களின் அபிப்பிராயமும் மாறி வருகின்றன. ஆதலால் தேசிய வாதிகளும் (அதாவது தாங்களும்) தங்கள் நிலைமையை ஜாக்கிரதைப் படுத்திக் கொள்ள உரிமை உண்டு என்று சொன்னதாக நிருபர் எழுதுகிறார் என்று "மித்திரன்" எழுதுகிறது.

திரு. வெரிவாடச் செட்டியாரிடம் திரு. இராமலிங்கம் செட்டியார் "ஐயங்கார் ஒப்பந்தப்படி நடந்து கொள்ளுவார் என்று நம்ப முடியாமலிருப்பதால்" என்று சொன்னதாக "குடி அரசு" பிரதிநிதி எழுதுகிறார். ஆனால் திரு. இராமலிங்கம் செட்டியார் "மித்திரன்" நிருபரிடம் "தனிப்பட்ட நபர்களின் அபிப்பிராயம் அடிக்கடி மாறி வருகின்றன" என்றே சொல்லி விட்டார். இதனால் ஐயங்கார் பேச்சுப்படி நடப்பார் என்று நம்ப முடியவில்லை என்பதற்கும் ஐயங்கார் மாறி விட்டார் என்பதற்கும் உள்ள வித்தியாசம் என்ன என்று பார்த்தால் திரு. இராமலிங்கம் செட்டியார் திரு. வெரிவாடச் செட்டியாரிடம் சொன்னதைப் பார்க்கிலும் "மித்திரன்" நிருபரிடம் இன்னும் கொஞ்சம் பலமாகவே சொல்லி விட்டார்.

"தனிப்பட்ட நபர்" என்பது ஐயங்காரைக் குறிக்குமா என்பது கேள்வி. ஐயங்காரைத் தவிற வேறு தனிப்பட்ட நபரைப் பற்றி செட்டியார் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லை. செட்டியாருக்கும் பொறுப்பான தனிப்பட்ட நபர் ஐயங்கார்தான். ஆதலால் "குடி அரசுக்கு மறுப்பு" என்றும், "குடி அரசு கட்டுக்கதை" யென்றும் பார்ப்பனப் பத்திரிகையான "மித்திரன்" எழுதி பொது ஜனங்களை ஏமாற்றுவது எவ்வளவு அயோக்கியத்தன மென்பதை வாசகர்களே உணரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆகவே திரு. இராமலிங்கம் செட்டியார் சுயராஜ்யக் கட்சியில் இல்லையென்பதை "சுதேசமித்திர"னாலேயே உறுதி செய்யப்பட்டதற்கு வாசகர்கள் மகிழ்வார்களென்றும் திரு. இராமலிங்கம் செட்டியாரவர்களிடம் பார்ப்பனரல்லாதாருக்கிருந்த அதிருப்தி மாறியிருக்கு மென்றும் நினைக்கிறோம்.

கோயமுத்தூர் ஜில்லாத் தலைவர்களின் கூட்டம்.

அடுத்து வரும் தேர்தல்களைப் பற்றியும் மற்றும் சில முக்கிய விஷயங்களைப் பற்றியும் யோசிக்கவும் நமது கோயமுத்தூர் ஜில்லாவின் முக்கிய தலைவரும் கொங்கு வேளாள சமூகத்தின் பட்டக்காரரும் தென் இந்தியாவுக்கே பெரிய விவசாயப்பண்ணையும் கால்நடைப் பண்ணையும் உடையவரும் ஈரோடு தாலூகாபோர்டு பிரசிடெண்டுமான மகா-ா-ா-ஸ்ரீ ரெய் பகதூர் நல்லதம்பிச் சக்கரை மண்றாடியார் அவர்கள் நமது ஜில்லா பிரமுகர்களுக்கு ஒரு அழைப்புக் கடிதம் அனுப்பியுள்ளார்கள். அக்கூட்டம் 7-7-26-உ பிற்பகல் 2-மணிக்கு கோயமுத்தூரில் ஸ்ரீமான் சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் பங்களாவில் கூடும் ஆதலால் நமது ஜில்லா பிரமுகர்கள் அன்று அவசியம் விஜயம் செய்து ஏதாவது ஒரு முடிவுக்குவந்து ஜில்லாவின் ஒற்றுமையையும் மேன்மையையும் சுயமரியாதையையும் காக்க வேண்டுகிறோம்.

கேரள நாட்டில் திரு நாயக்கர் அவர்கள்.

திருவாங்கூர் தொழிலாளர் மகாநாடு.

20-6-26.

கடந்த ஜூன் மாதம் 20-ம் தேதி ஆலப்பிழையில் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அக்கிராசனத்தின் கீழ் திருவாங்கூர் தொழிலாளர் மகாநாடு கூட்டப்பட்டது. மாலை 3-மணிக்கு அக்கிராசனர் திரு. இராமசாமி நாயக்கரையும் திரு. டி. கே. மாதவன், எஸ். கே. நாயர், கொச்சி சட்ட சபை மெம்பர் திரு. எ. பி. சேலம் ஆகியோர்களையும் மோட்டார் வாகனத்தில் மேள வாத்தியங்களுடன் பெருங் கூட்டத்தோடு ஊர்வலமாக மகா நாட்டுப் பந்தலுக்கு அழைத்துக் கொண்டு போகப்பட்டது. சரியாய் 4-மணிக்கு மகாநாடு ஆரம்பிக்கப்பட்டதும் தேசியப்பாட்டுகள் பாடப்பட்டு தொழிலாளர்களால் உபசாரப் பத்திரமாக மலையாளத்தில் சிலபாட்டுகள் பாடப்பட்டதும் வரவேற்புப் பிரசங்கமும் வருஷாந்திர ரிப்போர்ட்டும் காரியதரிசியால் வாசிக்கப்பட்டது.

பின்னர் தொழிலாளர் சம்பந்தமாகவும் மற்றும் பல பொது நல சம்பந்தமாகவும் பல தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவைகளில் முக்கியமானது தொழிலாளிகளுக்கு சட்டசபையில் தனிப்பிரதிநிதித்துவம் வேண்டுமென்பதும், தாழ்ந்த வகுப்பார் முன்னேற்ற இலாக்காவுக்கு தாழ்ந்த வகுப்பாரில் ஒருவரையாவது நியமிக்கவேண்டுமென்பதும், திருவாங்கூர் பத்திரிகை அடக்குமுறைச் சட்டத்தைக் கண்டித்து அதை எடுத்து விடவேண்டும் என்கிற தீர்மானங்களே முக்கியமானதாகும். மேலும் தோட்டக் கூலிகளுக்கு சர்க்காரும் தொழிலாளர் சங்கமும் உதவிசெய்ய வேண்டுமென்றும் திருவாங்கூர் ராஜ்யத்திலுள்ள சகல தொழிலாளிகளும் இச் சங்கத்தில் சேரவேண்டுமென்றும் தொழிலாளர் சங்கத்தை அனைவரும் ஆதரிக்க வேண்டுமென்றும் பல தீர்மானங்களும் நிறைவேறின. இவைகளைப் பற்றி திருவாளர்கள் டி. கே. மாதவனும் எஸ். கே. நாயரும், ஜனார்த்தனம் பிள்ளையும் பேசினார்கள். திரு. எ. பி. சேலம் பத்திரிகைச் சட்டத்தைக் கண்டித்து மிக உருக்கமாகப் பேசினார்.

கடைசியாக முடிவுரையில் அக்கிராசனர் திரு. இராமசாமி நாயக்கர் சுமார் இரண்டு மணி நேரம் "தொழிலாளர் யார்" என்பது பற்றியும் அவர்கள் நடந்து கொள்ளவேண்டியதைப் பற்றியும், அரசியல் தலைவர்கள் கையில் தொழிலாளர் சிக்கக் கூடாது என்றும், சிக்கினதால் இதுவரை தொழிலாளர் இயக்கங்களுக்கு ஏற்பட்ட கெடுதியைப் பற்றியும் அதிலிருந்து தப்பிக்கும் வழியைப்பற்றியும் ஒவ்வொரு தொழிலாளியும் உணரும்படி பேசி கடைசியாக திருவாங்கூர் பத்திரிகைச் சட்டத்தைப் பற்றியும் பேசி அச் சட்டத்தை ஒழிக்க சத்தியாக்கிரகம் தவிர வேறு வழியில்லை என்றும், அதன் பிரகாரம் திருவாங்கூர் பத்திரிகாசிரியர்களும் பொது ஜனங்களும் சத்தியாக்கிரகம் நடத்துவதாயிருந்தால் தானே முதல் தொண்டனாக வந்து சேருவதாகவும் உறுதி கொடுத்தார். பிறகு அக்கிராசனருக்குப் புஷ்ப மாலை அணிவித்து வந்தன வழிபாடுகளுடனும் வெகு குதூகலத்துடனும் இரவு 8-மணிக்குக கூட்டம் இனிது முடிந்தது.

எரணாகுளம். (21—6—26.)

மறுநாள் மாலை எரணாகுளம் கடற்கரையில் ஒரு பெரிய மகாநாடு கூட்டப்பட்டது. அக் கூட்டத்திற்கு திரு. நாராயண மேனன் தலைமை வகித்து திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கரை அறிமுகம் செய்து வைத்தவுடன் கதரைப்பற்றி திரு. நாயக்கர் 2-மணி நேரம் பேசினதின் சுருக்கம் பின் வருமாறு:

கதர் ஏழைகளின் சுயராஜ்யத்திற்காக மகாத்மாவினால் கண்டு பிடிக்கப்பட்டது. ஏழைகள் விடுதலை அடைந்து விட்டால் நமது நாட்டுப் படித்தவர்கள் பிழைக்கமுடியாதாகையால் கதர் இயக்கத்தைக கொல்ல வேண்டுமென்றும், மக்கள் ஒற்றுமை கெட்டு ஒழுக்கந் தவறி நடந்தால்தான் சில வகுப்பார் பிழைக்கக்கூடுமாதலால் மற்றும் மகாத்மாவின் நிர்மாணத் திட்டங்களைக கொல்லவும், படித்தவர்களும் உயர்ந்த ஜாதியார் என்போர்களும் சேர்ந்து செய்த சூழ்ச்சியால் நிர்மாணத் திட்டம் அடியோடு அரசியலிலிருந்து எடுபட்டுப் போய்விட்டதென்றும் இவை நிறைவேறினலொழிய இந்தியாவுக்கு ஒற்றுமையும் ஒழுக்கமும் ஜீவன மார்க்கமும் சுதந்திரமும், ஏற்படாதென்றும் ஆதலால் தேச பக்தி உள்ள மக்கள் முதலாவதாகக் கதர் உடுத்த வேண்டியது அவசியமென்றும், படித்த வகுப்பார் சட்ட சபைக் கலகத்தை உண்டாக்கினதால் மகாத்மா ஐந்து வருஷ வேலையும் அடியோடு கெட்டுப் போய்விட்டதென்றும், ஆதலால் சட்ட சபைப் பேச்சே உங்களுக்கு வேண்டியதில்லையென்றும் கூறினர். கூட்டத்தில் அநேகர் மறு தினத்திலிருந்தே கதர் உடுத்துவதாய் உறுதி செய்து கொண்டு போனார்கள்.

கதர்கடை திறப்புவிழா.

22—6—26.

எரணாகுளம் பெரிய கடை வீதியில் 22-ம் தேதி காலை 10-மணிக்கு திரு. கிருஷ்ணன் நாயர் பி. ஏ., பி. எல்., அவர்கள் அக்கிராசனத்தில் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களால் தமிழ்நாடு கதர் ஸ்தாபனத்தின் சார்பாக ஒரு கதர் கடை திறக்கப்பட்டது. ஏராளமான உள்ளூர் பிரமுகர்கள் வந்திருந்தார்கள். அக்கிராசனர் கதரைப் பற்றியும் திரு. நாயக்கரைப் பற்றியும் சில வார்த்தைகள் சொல்லி, திரு. நாயக்கரை கதர் கடையைத் திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டார்.

திரு. நாயக்கர் கதரின் அவசியத்தைப் பற்றி கொஞ்ச நேரம் பேசி கடையைத் திறந்து வைத்தார். சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்றன. கதர் ஸ்தாபன காரியதரிசி திரு. எஸ். இராமநாதன், திரு. அய்யாமுத்துக்கவுண்டர் இருவரும் நான்குநாள் முன்னதாகவே எரணாகுளத்திற்குப் போய் கதர் கடை திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தார்கள். திரு. எஸ். இராமநாதன் பெங்களூரிலும் ஒரு கதர் கடை திறப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய பெங்களூருக்குப் போயிருக்கிறார்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி.)

விட்டு வெளியில் வந்த பிறகு கல்கத்தா சட்ட சபைக்கு, அவசரச் சட்டத்தைத் தடுக்கவேண்டும் என்கிற முகாந்திரத்தின் பேரில், போய்ப் பார்த்தார்களே! அவசரச் சட்டத்தைத் தடுக்க முடிந்ததா என்று கவனித்தார்களா? கவனித்திருந்தால் மறுபடியும் சட்ட சபைகளுக்குள் எந்தக் காரியம் செய்ய முடியும் என்பதை உணர்வார்களல்லவா? சட்ட சபையில் மெஜாரிட்டி பலம் பெற்ற வங்காள மாகாண சட்ட சபையிலேயே ஒன்றும் செய்ய முடியவில்லையென்றால் மெஜாரிட்டி இல்லாததும் மதிக்கத் தகுந்த மைனாரிட்டி கூட இல்லாததுமான சென்னை சட்ட சபையில் என்ன காரியம் செய்ய முடியும்? இதையெல்லாம் பொது ஜனங்கள் அறியமாட்டார்களா? அறிந்தால் தங்களை எப்படி மதிப்பார்கள் என்றுகூட நினைக்கமுடியாத அவ்வளவு மானங் கெட்ட தன்மையும் முட்டாள் தனமும் உள்ள "வீரர்"களால் தேசத்திற்கு என்ன நன்மை விளையும்?

ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களுக்கும் சுயராஜ்யக் கட்சி மெம்பர்களுக்கும் ஜஸ்டிஸ் கட்சியை விட்டுப் புதிதாய் சுயராஜ்யக் கட்சியில் 'ஞானஸ்நானம்' பெற்ற மெம்பர்களுக்கும் என்ன வித்தியாசமென்று பார்ப்போமானால் ஜஸ்டிஸ் கட்சி மெம்பர்களுக்கு சுய மரியாதை இருக்கிறது; அதாவது; இன்றைக்கு ஓட்டர்களை ஏமாற்றுவதற்காக பொய் விரமபேசி வெளியே போய்விட்டால் நாளைக்கு எந்த முகத்தைக் கொண்டு சட்ட சபைக்குள் நுழைந்து அங்குள்ளவர்கள் முகத்தில் எப்படி விழிப்பது என்றும்; அங்கு ஒரு காரியமும் செய்ய முடியவில்லை என்று சொல்லிவிட்டு வெளியில் வந்துவிட்ட பிறகு எந்த முகத்தைக் கொண்டு மறுபடியும் ஓட்டர்களிடம் போய் ஓட்டுக் கேட்கிறது, என்றும் நினைத்துத் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, ஆதியில் ஓட்டர்களிடம் என்ன சொல்லி சட்ட சபைக்குப் போனார்களோ அந்த வார்த்தையிலேயே இன்னும் நிற்கிறார்கள்.

சுயராஜ்யக் கட்சியாரோ சுய மரியாதை, மானம், வெட்கம் ஆகிய எல்லாவற்றையும், உதிர்த்துவிட்ட "மாசில்லா பரிசுத்த"வான்களாதலால் என்ன வேண்டுமானாலும் செய்யவும், எதை வேண்டுமானாலும் பேசவும் தயாராயிருக்கிறார்கள்; இன்னும் இருக்கப் போகிறார்கள். இவைதான் ஜஸ்டிஸ் கட்சிக்கும் காங்கிரஸோடு இரண்டறக் கலந்த சுயராஜ்யக் கட்சிக்கும் உள்ள வித்தியாசம்.

இந்தியாவின் விடுதலைக்கு-சுயமரியாதைக்கு-சுய ராஜ்யத்திற்கு-கை யெழுத்து கூடப் போடத் தெரியாத மக்களை 100-க்கு 90 பேராக உடைய பாரதத் தாயின் கற்பைக் காப்பதற்கு திரு. சீனிவாசய்யங்கார் "தலைவராக"வும், திரு. எ. ரெங்கசாமி ஐயங்கார் 'காரியதரிசி'யாகவும் அடையப் பெற்ற இந்தியாவே! உனது பாக்கியமே பாக்கியம்!! ஜப்பானுக்கு வந்த பூகம்பம் உன்னை ஏன் மறந்துவிட்டதோ, தெரியவில்லை!!!

திரு. சக்கரையும் திரு. ஆரியாவும்.

(சித்திரபுத்திரன் எழுதுவது.)

திரு. சக்கரைச் செட்டியார் அவர்கள் ஹிந்துவரியிருந்து கிறிஸ்துவராக மதம் மாறியவர்; அவர் சென்னை திருவாளர்கள் ஓ. தணிகாசலம் செட்டியார், ஓ. கந்தசாமி செட்டியார் ஆகியவர்களுக்கு நெருங்கின உறவினராயிருந்தவர். பி. ஏ., பி. எல்., பட்டம் பெற்ற வக்கீல். 1906-ல் அதாவது ஏறக்குறைய 20-வருஷங்களுக்கு முன்னிருந்தே அரசியல் துறையில் இறங்கினவர். வங்காளப் பிரிவினையின் காரணமாக இந்தியா வெங்கும் ஏற்பட்ட "சுதேசி"க் கிளர்ச்சியின் போதே திரு. சக்கரைச் செட்டியாரும் திரு. சுரேந்திரநாத் ஆரியாவும் சென்னை மாகாணத்தில்—தமிழ் நாட்டில்—மேடை மீதேறி ஸ்தரியமாய்ப் பிரசங்கம் செய்த பார்ப்பனரல்லாத வீரர்கள். தேசத்தின் உழைப்பிற்காகவும், உழைத்ததின் பலனாகவும், தங்கள் தங்கள் வரும்படிகளை விட்டவர்கள். உண்மைத் தேசாபிமானம் என்பது இவ்விரு கனவான்களுக்கும் இல்லாதிருந்து பார்ப்பனர்கள் போலும் மற்றும் இரண்டொரு பார்ப்பனரல்லாதாரைப் போலும் வயிற்றுப் பிழைப்பு தேசாபிமானிகளா யிருந்திருந்தால் திரு. சக்கரைச் செட்டியார், வயிற்றுப் பிழைப்பு தேசாபிமானத்தால் ஜட்ஜி ஸ்தானம் பெற்ற பார்ப்பனர்களுக்கு முன்னாலேயே, ஹைகோர்ட் ஜட்ஜியாக இருப்பார். அது போலவே திரு. ஆரியாவும் மாதம் ஒன்றுக்கு ரூ 1000, 1500 சம்பாதிக்கும் உத்தியோகத்தில் இருப்பார். திரு. ஆரியா அவர்கள் தனது உத்தியோகத்தை விடுங்காலத்தில் மாதம் 700 ரூபாய் சம்பளமும் 300 ரூபாய் படியும் வாங்கிக் கொண்டிருந்தவர். இருவரும் தேச நன்மையின் பொருட்டு இங்கிலாந்து முதலிய ஐரோப்பிய நாட்டிற்குச் சென்று அரசியல் இயக்கங்களின் போக்கை அறிந்து வந்தவர்கள்.

இன்னும் திரு. ஆரியா அவர்கள் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய் வாடகை பங்களாவில் குடி இருக்கிறார். அவரது பங்களாவிலுள்ள பூச்செடிகளுக்குத் தண்ணீர் வார்க்க 3, 4 ஆள்களை வைத்திருக்கிறார். ஐரோப்பியர் முறையில் தனது வாழ்க்கையை நடாத்துகிறார். அவரது மனைவியார் ஐரோப்பாவில் வசித்துக் கொண்டிருக்கிறார்.

ஜெயில் என்றால் பொது ஜனங்கள் பயந்து நடுங்கின காலத்தில் சுமார் 20 வருஷம் கடினகாவல் தண்டனை விதிக்கப்பட்டு, பிறகு பல காரணங்களால் அத் தண்டனைகள் குறைந்து, ஐந்து வருஷகாலத்திற்குக் குறையாமல் கடினக்காவல் தண்டனை அடைந்தவர்; ஜெயிலில் மாவு அறைத்தவர்; தோட்ட வேலை செய்தவர். திரு. சக்கரைச் செட்டியார் தண்டனை அடையவில்லையானாலும் ஏறக்குறைய திரு. ஆரியாவைப் போலவே சுக போகத்தில் இருந்தவர்.

இவ்வாறு பீடும் பெருமையோடிருந்த இவ்விருவர்கள் நிலைமையும் ஐயங்கார்ராஜீயத்தில் எப்படி மதிக்கப்படுகிறது என்பதையோசித்துப் பாருங்கள். அப்பொழுதுதான், பார்ப்பனரல்லாத ராஜீயவாதிகள் பார்ப்பனரைக் கண்டால் ஏன் பயப்படுகிறார்கள்? ஏன் குட்டிக்கரணம் போடுகிறார்கள்? என்பது வெளியாகும். பார்ப்பன ஆதிக்கத்திற்கு எதிரிடையாய் தீவிரதேசிய வாதிகளான டாக்டர் நாயர், சர். தியாகராயச் செட்டியார் ஆகியவர்களால் காணப்பெற்ற ஜஸ்டிஸ் கட்சியென்னும் பார்ப்பனரல்லாதாரியக்கத்தை ஒழிக்கப் பார்ப்பனர்களால் உண்டாக்கப்பட்ட சூழ்ச்சிக்கு அனுகூலமாக, பார்ப்பனரல்லாதாரிலேயே சிலர் வேண்டுமென்று பார்ப்பனர்களால் போடப்பட்ட வலையில் திருவாளர்கள் திரு. வி. கலியாண சுந்தர முதலியார், டாக்டர் வரதராஜுலு நாயுடு முதலியவர்கள் சிக்கினது போலவே நமது சக்கரைச் செட்டியாரும் அதில் அகப்பட்டுக் கொண்டதோடல்லாமல் ஜஸ்டிஸ் கட்சியைத் தூற்றும் வேலையைத் திரு. முதலியாரும், டாக்டர் நாயுடுகாரும் தமிழ் நாட்டோடு—தமிழ் மக்களிடத்தோடு—நின்றார்கள். ஆனால் திரு. சக்கரைச் செட்டியாரோ இந்தப் பார்ப்பனர்களுக்காக இந்தியாவை விட்டு ஐரோப்பியா தேசம் போய் லண்டன் பட்டணத்திலுள்ள ஆங்கிலேய மக்கள் வரை சென்று பாடுபட்டவர்.

இப்படிப்பட்ட கனவான்களான திரு. சக்கரைச் செட்டியார் திரு. ஆரியா ஆகிய இருவர்களையும் "நன்றி யறிதலுள்ள" பார்ப்பனர்கள் என்ன செய்தார்கள் என்பது நமதருமைத் தமிழ் மக்கள் கொஞ்சம் அறிய வேண்டாமா?

திரு. ஆரியா அவர்களைக் காங்கிரசிலிருந்து தீர்மான மூலமாய் வெருட்டுவதோடல்லாமல், காலிகளை விட்டு உதைக்கும்படியும் செய்தார்கள். திரு. சக்கரைச் செட்டியாரைப் பற்றியோவென்றால், சென்னைக் கார்ப்பரேஷனில் பார்ப்பனர்கள் ஸ்தானம் பெறும்வரை திரு. செட்டியாரை சுயராஜ்யக் கட்சித்தலைவராய் வைத்து, ஏழை ஓட்டர்களை ஏமாற்றிப் பார்ப்பனர் கார்ப்பரேஷனுக்கு வரும்படி செய்து, அவர்கள் உள்ளே வந்தவுடன் திரு. சக்கரையை சுயராஜ்யக் கட்சித் தலைவர் பட்டத்திலிருந்து தள்ளி அந்த ஸ்தானத்தை பாஷ்யம் ஐயங்கார் என்கிற ஒரு பார்ப்பனருக்குப் பட்டம் கட்டி, திரு. சக்கரைக்கு வாக்களித்திருந்த கார்ப்பரேஷன் தலைவர் பதவியையும் அவருக்குக் கொடுக்காமல் மோசம் செய்ததோடல்லாமல், அடியோடு ராஜீய வாழ்விலிருந்தே அவரை டிஸ்மிஸ் (நீக்கி) செய்துவிட்டார்கள். இதன் காரணம் என்ன? அடிக்கடி புது ஆட்களைச் சேர்த்தால்தான் இவர்கள் காலைக் கழுவிக் கொண்டே இருக்க சம்மதிப்பார்கள். பழைய ஆட்கள் கொஞ்ச நாள் போய் விட்டால் இவர்கள் யோக்கியதையை அறிந்து கொள்ளுகிறார்கள். ஆதலால் பழைய ஆட்களைக் கொஞ்சமும் வைத்திருக்க மாட்டார்கள். உதாரணமாக, இப்போது புதிதாய் வலை போட்டுப் பிடித்திருக்கும் ஆட்களின் பெயர்களைப் பார்த்தாலே தெரியவரும்.

இனி தமிழ் நாட்டுக்கு உண்மையான யோக்கியன், தேச பக்தன், சமூக பக்தன் யாரென்று நாம் அறிய வேண்டுமானால் இந்தப் பார்ப்பனர்களால் கண்டனத் தீர்மானம் பெற்றவர்களும் உதை பட்டவர்களும் பார்ப்பன காங்கிரசிலிருந்து டிஸ்மிஸ் (தள்ளுபடி) செய்யப் பட்ட பார்ப்பனரல்லாதார்களுமே யாவர்கள். மேற்படி குணங்களுக்கு எதிரிடையானவர்கள் யார் என்று கண்டுபிடிக்க வேண்டுமானால் நமது பார்ப்பனர்களால் பூஜிக்கப்பட்டவர்களே யாவார்கள். எது போலென்றால், ராஜீய காரணங்களுக்காக நமது சர்க்காரால் தண்டிக்கப் பட்டவன் தேச பக்தர்கள் என்று சொல்லுவதும் சர்க்காரால் பெரிய பட்டங்களும் பதவிகளும் அடைந்தவர்களை தேசத் துரோகிகளென்றும் சொல்லுவது போலவே யாகும்.

அல்லாமலும் காட்டில் கிடக்கும் கல்லை சாமியாக்குவதற்கு நமது பார்ப்பனர்களுக்கு சக்தியிருப்பது போலவே தெருவில் ஓட்டுப் பொறுக்கும் அன்னக்காவடிகளை தேச பக்தர்களாக்குவதற்கும் நமது பார்ப்பனர்களுக்கு சக்தியிருக்கிறது. ஆதலால்தான் பழைய "தலைவர்கள்" கழிபடுவதற்கு முன்னாலேயே அந்தப்பட்டத்திற்கு ஆள்கள் விண்ணப்பம் போட்டவண்ணமாயிருக்கிறார்கள். இதை யெல்லாம் பார்க்கும்போது நமது ஐயங்கார் கோஷ்டிக்கு இப்போது ஆனந்தத்தைத் தரத்தக்கதாயிருந்தாலும் இதன் பலன் கடைசியில் கல்கத்தா ஹிந்து முஸ்லீம் ஒற்றுமையைப்போல் விளைந்து விடுமோ வென நம்மைக் கவலைப் படச் செய்கிறது. இயற்கை தேவியின் திருவிளையாடல்களை நாம் எப்படி அறிய முடியும்?

ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் பரிசளிப்பு விழா.

இவ்விழாவில் 2-7-26-ல். கல்வி மந்திரி கனம் சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் தலைமை வகித்து பரிசு வழங்கினர்.

முதல் நாள் 1-7-26உ இரவு 9-30க்கு அவரை ஈரோடு நகரப் பிரமுகர்கள் பலர் ரயில்வே ஸ்டேஷனில் எதிர்கொண்டழைத்தனர். அன்றிரவு ஹைஸ்கூலில் நடைபெற்ற "காலவரிஷி" நாடகத்தைப் பார்க்க கனம் மந்திரியை அழைத்துச் சென்றனர். மறுநாள் காலை 8-30 மணிக்கு எலிமெண்டரி பாடசாலை உபாத்திமார்களால் கனம் மந்திரிக்கு வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கப் பட்டது. கனம் மந்திரி அவர்கள் 9-30 மணிக்கு மகாஜன ஹைஸ்கூலுக்கு வாத்திய கோஷத்துடன் அழைத்து வரப்பட்டு ஆசிரியர்களால் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக்கொடுக்கப் பட்டார். சென்னை சட்டசபை அபேக்ஷகராய் நிற்கும் ஜனாப் கே.எ.ஷேக்தாவூத் சாகிப் அவர்கள் 11மணிக்கு விருந்து நடத்தி வைத்தார். சுயராஜ்யக் கட்சிசட்டசபை மெம்பர்கள்உள்ளிட்ட பலர் வந்திருந்தனர். மாலை 3-மணிக்கு திரு டி. சீனிவாச முதலியார் தேக்கச்சேரி விருந்து நடத்தி வைத்தார். அதன் பிறகு மஹாஜன ஹைஸ்கூல் பரிசளிப்பு விழா நடந்தது. முதலில் திரு இ. வி. நஞ்சப்ப செட்டியார் அவர்கள் பள்ளி போர்டாரின் சார்பாக கனம் மந்திரிக்கு வரவேற்புப் பத்திரம் படித்துக் கொடுத்தார். ஹைஸ்கூல் செக்ரட்ரீ திரு எம். எஸ். முத்துக்கருப்ப செட்டியாரவர்கள் ஸ்கூல் ரிப்போர்டு வாசித்தார். ஜனாப் ஷேக்தாவூத் சாகிப் அவர்களால் கனம் மந்திரிக்கு பூமாலை சூட்டியபின் விழா முடிந்தது.

அகமுடையர் குல முதல் மகாநாடு.

திரு. ஆ. பழ. கா. வ. நாடிமுத்துப் பிள்ளை அவர்கள் செய்த வரவேற்புப் பிரசங்கச் சுருக்கம்.

அறிவுடை அங்கத்தினரே!

நாம் தற்கால நிலைமையில் எந்நிலைமையிலிருக்கின்றோமென்பதை ஆராய்வது முதன்மையாம். நமது அகமுடைய மரபினர் மக்கட்டொகுதியிலும் செல்வத்திலும் மற்றைய மரபினர்களைக் காட்டினும் குறைந்தவர்களல்லர். அவ்வாறிருந்தும் மற்றைய மரபினர்போல் நமது சென்னை மாகாணத்தில் அரசியல் நெறியினும் ஏனைய சமூகத்தினரிடத்திலும் உயர் நிலை பெறாது தாழ்ந்த நிலையில் மறைந்து கிடக்கின்றோம்.

நமது அகமுடைய சமூகம் முன்னேறுதற்கு செய்யப்புகும் பணிகள் பலவாம். அவற்றுள் முதலாவது நம் மரபில் தோன்றுகின்ற மாணவர்கள் கல்வி பெறுமாறு ஆங்காங்கு கல்விச் சாலைகளை அமைத்தலும் உயர்தரக் கல்வியை நாடிச் செல்லும் வறுமை மாணவர்கட்கு உண்டி விடுதி பெரிய பட்டினங்களில் அமைத்து உதவி புரிதலும் நம் மரபினர்க்கென உயர்தரக் கல்விச்சாலையும் உயர்தரக் கல்லூரியும் நிறுவுதலோடு நம் மரபினர் ஆசாரங்களை இக்காலத்துக்கேற்றவாறு சீருறச் செய்வதும் ஆம். இஃதன்றி மேல் நாட்டினரைப் போல் நம் மரபினர் உயர்வுற வேண்டுமாயின் பன்னெறிக் கைத்தொழிலும் பரவிய அறிவு நிரம்புதல் வேண்டும். மற்றும், அரசியல் நெறியில் அமைக்கப் பெற்றுள்ள கழகங்களில் நம் மரபினர்க்கேற்ப அங்கத்தினர் நிலைமையை தக்கவாறடைய முயலுதலும் நம் மரபை முன்னேறச் செய்வதாம்.

எல்லா மரபினர்களின் உரிமையை நாடி அந்தந்த மரபினர்களின் உரிமையை அளிப்பதில் எவ் வியக்கம் முன்னிற்கின்றதோ அவ் வியக்கமே உண்மை அரசியல் இயக்கமாகும். அரசியலில் எந்தச் சமூகம் பல்லாற்றினும் முன்னேறி, மற்றைச் சமூகங்கட்குத் தடை கல்லாகின்றதோ? அதனை, பிற்போக்குள்ள சமூகங்கள் உய்த்துணர்ந்து மேலுற முயலுதல், அதனதன் கடமையாம். அகமுடைக் குலத்தினர்களொவ்வொருவரும் நம மரபினரின் முன்னேற்றத்திற்காக தம் வருவாயில் சிறு பொருள் தனியுறவமைப்பது பெருநலன் தருவதாகும்.

இன்று நமது மாபெருங் கூட்டத்திற்குத் தலைமை தாங்க ஒப்புக்கொண்ட திருவாளர் டி. என். சுப்பிரமணிய பிள்ளையவர்கட்கு மீண்டுமொருமுறை வணக்கஞ் செலுத்துவதோடு, இம் மாபெருங் கூட்டம் இவண் நிகழுமாறு ஆங்காங்கு கூட்டங்கள் கூட்டிச் சொற்பொழிவாற்றி பெருந்தொண்டு புரிந்த பி. இராஜகோபால பிள்ளையவர்கட்கும் டி. வி. உமாமகேஸ்வரம் பிள்ளையவர்கட்கும் இம் மகாநாட்டிற் குதவி புரிந்த மற்றைய அன்பர்கட்கும், இங்கு குழுமியிருக்கும் அகமுடைக் குலப் பிரதிநிதிகட்கும், மற்றுமுள்ள அன்பர்கட்கும் வரவேற்புக் கழகச் சார்பாக நன்றி செலுத்துகின்றேன்.

தலைவர், திரு. த. நா. சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் முன்னுரையின் சுருக்கம்.

அன்பர்களே, நமது குடியானது இத்தமிழகத்தே தோன்றி, பண்டுதொட்டின்றுவரை வாழ்ந்துவரும் ஓர் பழங்குடியாம். பழங்காலத்தே நமது நாட்டில் சாதி வேற்றுமை மிகவின்மையால், நமது குடி இக்காலத்து வழங்கும் பெயரோடு அக்காலத்து விளங்கியதாகத் தெரியவில்லை. அப்பழங்காலத்து நம்மவர் யாவரும் "வேளாளர்" என்னும் பெரும் பிரிவினுள்ளடங்கியவர்களே யாவார்கள். பின்னர் அவ்வேளாண் மரபு, நாடுபற்றியும் தொழில்பற்றியும் பல பிரிவுகளாகப் பிரிந்து பல பெயர்களோடு உலவுவதாயிற்று. அவ்வாறு பிரிந்தவர்களே இக்காலத்துச் சோழிய வேளாளர், கொடிக்கால் வேளாளர், அகமுடைய வேளாளர் முதலியோராவர். "அகமுடையர்" என்னும் பெயர் தொழில் உரிமைபற்றி வந்ததொன்றேயாகும்.

ஆரிய மேம்பாடு தமிழகத்திற் பரவி தமிழ் நாட்டிலுள்ள நாடு, ஊர், குடி, முதலியவற்றிற்கெல்லாம ஆரியத்தொடர்பேற்றிப் பழங்கதைகள் தோற்றுவித்த காலத்தில், நமது குடிக்கும் ஓர் ஆரியக் கதைத்தொடர் போற்றி, நம்மவர் பலரையும் அதனை நம்புமபடியுஞ் செய்தனர். அப்பழங்கதைக் குறிப்பு நமது நாட்டின் வழக்கத்துக்கும் நமது முன்னோர்களின் உணர்ச்சிக்கும், பெரிதும் புறம்பாயதோடன்றி வெறுக்கத்தக்கதாக விரும்பினும், ஆரியவாடையில் மயங்கிய நம்மவரிற் பலர், அப்பழங்கதைக் குறிப்பை ஒப்புக்கொண்டதோடமையாது, தங்குடிக்கோர் ஆரியத்தொடர் பேற்பட்டதே யென்று மகிழ்ச்சிகொண்டு, அதை ஓர் பெருமையாகவும் சொல்லிக்கொள்ளத் தலைப்பட்டனர். உண்மையிற் பிறழ்ந்த அக்கதையினைக் கூறவும் என் உள்ளம் இசையாது. ஆராய்ச்சி மிக்க இக்காலத்தே அத்தகைய பொய்க்கதைகளை நம்மவர்கள் ஒப்புக்கொள்ளாததோடன்றி; தங்நலங் கருதிப் பிறர் கூறும் வெற்றுரைகளை மெய்யெனக்கொண்டு இடர்ப்படமாட்டார்கள் என்று திண்ணமாக எண்ணுகிறேன்.

நம் முன்னோர் வரலாறு எவ்வாறாயினுமாகுக. இப்போதைய நம்மவர் நிலையை ஆராய்வதும், உயர்வதற்கேற்ற வழிகளைத் தேடுவதுமே இக்கூட்டத்தின் முதல் நோக்கமாகும். நம்மவர் தமிழ் நாடெங்கும் பரவியுள்ளாரெனினும்; பெரும்பாலருக்கு உறைவிடமாகவிருப்பது, தஞ்சை, திருச்சிராப்பள்ளி, மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி முதலிய நாடுகளே (ஜில்லா) யாகும். தஞ்சை, திருச்சிராப்பள்ளி முதலிய பாகங்களில் நம்மவரை வேளாளரோடு கூட்டியும், மதுரை, நெல்லை முதலிய தென் பாகங்களில் மறவர்களோடு கூட்டியும், கருதுவதாகத் தெரிகிறது. தென் பாகங்களில் நம்மவர் நிலை தாழ்ந்ததாகவே தெரிகின்றது; பெரும்பாலர் தங்களை அகமுடையர் எனச் சொல்லிக்கொள்ளவும் கூசுகின்றார்களெனின், அவண் நம்மவர் நிலையான் கூறாதே புலப்படுவதாகும்.

நம்மவர் உலகத்தே மக்கள் என்று உலவுவதற்குத் தகுதியுடையவர்களாக வேண்டுமெனில் கல்வியையே நமது கடவுளாகக் கொள்ளல் வேண்டும்.

நம்மையும், நம் முன்னோரையும் இளமை தொட்டுப் பாலூட்டி வளர்த்த தாயாகிய 'தமிழன்னையை' இக்காலத்து யாவரும் வணங்கி வளம்படக் கருதி, அவ்வன்னையின் தலை மகன் தானேயென்பதனைத் தன் திரு, அறிவு, ஆற்றல்களை அவ்வம்மையின்முன்னுக்கே ஒப்பிவைத்துக் காட்டும் ஒரு பெரியார் நங்குடிச் செல்வரேயெனினும்; நம்மவரிற் பெரும்பாலர் அவ்வம்மையின் திருவருளுக்கு இலக்காகாதிருத்தல் பெரிதும் வியக்கத்தக்கதே.

இனி, நாம் நெடுநாளாக விழைந்து வந்த "தமிழ்ப்பல்கலைக் கழகம்" இப்பொழுது தோன்றுந் தருவாயிலிருக்கிறது. இப்பல்கலைக்கழகம் உண்மையாகவே தமிழ்ப்பல்கலைக் கழகமாயிருக்கவேண்டின், ஆங்கிலப் பல்கலைக் கழகங்களில் ஆங்கில மொழிக்கு எத்தகுதி கொடுக்கப்பட்டுள்ளதோ, அத்தகுதி தமிழ் மொழிக்குக் கொடுபடல் வேண்டும். தமிழ் மொழியிலேயே எல்லாக் கலைகளும் எல்லா வகுப்புகளிலும் பயிற்றப்படல் வேண்டும். தமிழ் மொழியே எவ்வகைப்பயிற்சிக்கு முரியதெனவேற்பட்டால், நம்மொழியிலே இல்லாத கலையும் நூலும் இல்லையெனக்கூறும்படி நல்ல நூல்கள் பலவும வெளிவருமென்பதும் ஒருதலை. தமிழ்க்குத் தக்க இடம்கொடுப்பதாயின் நம்மவர் அனைவரும் இப்பல்கலைக் கழகத்துக்கு எல்லா வழியிலும் உதவ வேண்டும்.

நம்மவர்கள் தமது வாழ்க்கையின் பொருட்டுப் பற்பல தொழில்களைக்கொண்டுள்ளாராயினும்; உழவுத்தொழிலைச் செய்பவர்களும் தக்கவாறு உழைத்தும், காலத்திற்கேற்பச் சீர்திருத்தியும் தந்தொழிலை நடத்துவார்களாயின், பெரிதும் நன்மை பயக்கும்.

கிராம வாழ்க்கையையுடைய நம்மவர்கள் அவ்வவ்வூர்கட்கேற்ற சிறு கைத்தொழில்களைத் தொடங்கல்வேண்டும். பிறநாடுகளிற் பயின்று பெருகச்செய்யங்கூடிய கைத்தொழிலையுடையவர்கள் கூட்டுறவினால் சில பெருந் தொழிற்சாலைகளை நிறுவின் பிழைப்பற்றபலர்க்கும் பிழைப்புக்கு வழியாகும். உலகியல், அரசியல் முதலிய பயின் வழக்கறிஞர்களும், புலவர்களும், ஆசிரியர்களும், அரசாங்கத்தில் தக்கபதவிகளை ஏற்கக்கூடிய அறிவும் பயிற்சியுமுடையவர்களும் பெருவணிகர்களும் நம்மவரிற் பெரும்பால தோன்றுதற்காயன முயற்சிகளை நாம் செய்யவேண்டும்.

"உலகெலாம் நம்மகம், அலகிலா இறைவனே அன்னையும் அத்தனும், இகுப மக்கள் எம்முடன் பிறந்தோர்" என்ற அருளுணர்ச்சி நம்மைவிட்டென்றும் அகலக் கூடாது.

ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் வகுப்பு முன்னேற்றத்தைக் குறித்து ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். அதையும் மறுநாள் நடந்த தீர்மானங்களையும் பின்னால் வெளியிடுவோம்.

(4-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்று எழுதுகிறது. ஆனால் ஜனாப்கள் ஹமீத்கான் ஷாபிமகமது ஆகிய இருவர்களும் தங்களது சொந்த நலத்திற்காக தங்களது சுயமரியாதையை இழந்துவிட்டு ஐயங்காருக்கு நல்ல பிள்ளையாய் நடந்துகொள்ளும் விஷயம் உலகமறிந்த இரகசியம் என்றாலும், அதை நாம் எடுத்துச் சொல்லுவதற்கு பல காரணங்களாலும் முஸ்லிம் சமுகத்தின் கௌரதையை உத்தேசித்து மறைத்தே வைத்து வந்தோம். எனினும் தமிழ் நாட்டு முஸ்லிம் பிரதிநிதியாகிய "ஸைபுல் இஸ்லாம்" தங்கள் சமுகத்தின் நன்மையைக் கோரி இவ்வளவு தைரியமாய் இந்த விஷயங்களை ஒப்புக்கொண்டு வெளியாக்கியதற்காக அதை நாம் மிகுதியும்போற்றுகிறோம். 'ஜனாப்களான ஹமீத்கான், ஷாபிமுகமது சாஹிப் ஆகியவர்கள் ஐயங்கார் இஷ்டப்படி நடந்து அவருடைய முழு தயவையும் பெற்றார்கள்' என்று "ஸைபுல் இஸ்லாம்" எழுதுவதில் எவ்வளவு சங்கதி தொக்கியிருக்கிறது என்பதைக் கொஞ்சம் கவனித்தாலும் தெரியாமல் போகாது. தவிரவும் இவர்கள் நடத்தைக்காக ஐயங்கார் வாக்காளர்களுக்கு ஜாமீன் கொடுத்தார் என்பதில் எவ்வளவு அர்த்தமிருக்கிறது என்பதையும் கவனித்தவர்களுக்கு விளங்காமல் போகாது.

முஸ்லிம்களுக்கு உண்மையான தனிவாக்காளர் தொகுதி இருந்திருக்குமானால் சுயமதிப்புள்ள முஸ்லிம்கள் நடந்துகொள்ள முடியாத தோரணையில் நடந்துகொண்டிருக்க முடியுமா? அல்லாமலும் ஒரு முஸ்லிம் சென்னைக் கார்ப்பொரேஷனில் ஸ்தானம் பெற ஐயங்காருடைய ஜாமீன் அவசியமாகுமா? ஐயங்கார் ஜாமீன் பெறுவதற்காக முஸ்லிம்கள் ஐயங்கார் இஷ்டப்படி நடக்கவேண்டிய அவசியம் ஏற்படுமா என்பவைகளை முஸ்லிம் சமுகம் யோசிக்காமலிருக்குமென்று நாம் நம்பவில்லை.

இப்போது உண்மையாகவே சென்னையில் ஜனசங்கியை 5,30,000. இதில் மகமதியரின் சங்கியை 53,000. சென்னை நகரபரிபாலன சபையாகிய கார்ப்பரேஷன் சபைக்கு கவுன்சிலர்களின் தொகை 50. இதில் விகிதாசார எண்ணிக்கைப்படி மகமதியர்களுக்கு 5-ஸ்தானங்கள் கிடைக்கவேண்டும். அதேபிரகாரம் கிறிஸ்துவர்களுக்கு 4-ஸ்தானம் கிடைக்கவேண்டும். மற்றபடி, தீண்டப்படாத வகுப்பார் ஐரோப்பிய வகுப்பார் முதலியவர்களுக்கும் கொடுத்துவிட்டால் இவர்கள் நீங்கிய பார்ப்பனரல்லாதவர்களுக்கு 20-ஸ்தானங்கள் கிடைக்கலாம். ஆதலால் இவர்கள் யாரும் தங்கள் தங்கள் வகுப்புக்குப் பிரதிநிதித்துவம் பெற ஐயங்காருக்கு நல்ல பிள்ளையாக வேண்டிய அவசியமில்லை; தத்தம் சமுகத்திற்குத் துரோகம் செய்ய வேண்டியதில்லை; சர்க்கார் தயவையும் நாட வேண்டியதில்லை. மகமதியர்களுக்குஉண்மையான தனி வாக்காளர்கள் தொகுதி இருந்திருக்குமானால் ஜனாப்கள் ஹமீத்கானும் ஷாபிமகமது சாஹிபும் தங்கள் சுயமரியாதையை இழந்து ஐயங்காருக்கு நல்ல பிள்ளைகளாக வேண்டிய அவசியமும் நேர்ந்திருக்காது. உண்மையான முஸ்லிம் பிரதிநிதிகளே வரவும் இடமுண்டாகும்.

நாகை தென்இந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் எட்டாம் ஆண்டு விழா.

—0—

(ஐயங்கார் தர்மத்தைப் பற்றி)

நாகை தென்னிந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் 8-ம் ஆண்டு விழா கோவை ஜில்லா பீளமேடு திரு. பி. எஸ். வேணுகோபால் நாயுடு அவர்களின் தலைமையின் கீழ் வெகு சிறப்பாக நடைபெற்றது. தொழிலாளர் சங்கத்தில் மகாத்மா காந்தி, திரு. வெ. ப. பக்கிரிசாமி பிள்ளை ஆகிய இவருரின் படமும் திரு. நாயுடுகாரால் திறந்து வைக்கப்பட்டது. திரு. நாயுடுகாரின் தலைமைப் பிரசங்கம் மிக்க அருமையாக இருந்தது.

ஸ்ரீமான் நாயுடு அவர்கள் இரண்டாம் நாள் முடிவுரை பேசும்போது, நான் உங்களைப் போல் ஒரு தொழிலாளி என்றும் தற்சமயம் நான் ரயில்வேயில் வேலை பார்க்காவிடினும் தொழிலாளியாகவேதான் யிருக்கிறேன் என்று பின் வருமாறு பேசினார். அதாவது பீளமேடு பி. எஸ். ஜி. கோவிந்தசாமிநாயுடு & சன்ஸ் அவர்களின் இண்டஸ்டிரியல் தொழிற்சாலையில் கௌரவ காரியதரிசியாகவே இருக்கிறேன். அவர்கள் எனக்கு தாயாதி வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தான் என்றும், அந்த தொழிற்சாலையின் பொறுப்பை முழுவதும் என்னிடத்தில்தான் ஒப்பித்து இருக்கிறார்கள் என்றும், அதற்கு அவர்கள் தங்களுடைய சொந்த சொத்திலிருந்து (2,00,000) இரண்டு லக்ஷம் ரூபாய் எடுத்து தர்மம் செய்து இருக்கிறார்கள் என்றும் மேலும் ஒரு (High School) ஒன்று கட்டி அதாவது பொதுவில் மூலதனம் 75-ஆயிரம் ரூபாய் என்று அதில் 30-ஆயிரம் ரூபாய் இவர்கள் தான் கொடுத்திருக்கிறார்கள் என்றும் சொல்லிவிட்டு, பின்னும் ஸ்ரீமான் சி. வி. வெங்கடரமண அய்யங்காரவர்களைப் போல் எலெக்ஷனுக்காகவென்று பத்திரிகைகளுக்கு தர்ம விளம்பரம் செய்யவில்லை. ஆகையால் இவர்களின் பெயர் வெளியில் தெரியவில்லை என்று பேசி வரும்போதுதான் அந்த விஜயம் செய்திருந்த பொது ஜனங்களுக்கு அய்யங்கார் அவர்களின் தர்மத்தின் மர்மமும் அதை விளம்பரப்படுத்தும் பத்திரிகைகளின் யோக்கியதையும் வெளிப்பட்டது. மறுபடியும் ஸ்ரீமான் வேணுகோபால் நாயுடு அவர்கள் தமிழ் நாட்டில் சுயராஜ்யக் கட்சி என்று ஒரு கட்சி ஏற்பட்ட பின் சுயராஜ்யம் நமக்கு வந்துவிட்டது; அதாவது ஆங்கில 'சுயராஜ்யா' ஒன்று, தமிழ் 'சுயராஜ்யா' ஒன்று ஆக இரண்டு பத்திரிகைகள் காங்கிரஸ் நிதியிலிருந்து நடத்தப்பட்டு வருகிறதே; அது தான் நாம் அடைந்த சுயராஜ்யம் என்று சொல்லிவிட்டு, பின்னும் உங்களுக்கு தொழிலாளர் சார்பாக ஒரு பத்திரிகை அவசியம் என்று சொல்லி ஸ்ரீமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்கள் சென்ற வருடத்திலிருந்து "குடி அரசு" என்கிற பத்திரிகை ஆரம்பிக்காவிடில் அவர் சென்ற வருடம் செய்த வேலையும், இவ்வருடம் செய்துகொண்டு வருகிறவேலையும் ஜனங்களுக்கு கொஞ்சமும் உபயோகப்பட்டிருக்காது என்றும், ஆகையால்உங்களுக்கு தனித்தபத்திரிகை அவசியம் என்று சொல்லி முடித்து, பிறகு ஒற்றுமை என்பதைப் பற்றி கொஞ்சம் நேரம் வரையில் பேசிய பின் காரியதரிசி அவர்களால் வந்தன உபசாரம் கூறப்பட்டு கூட்டம் 9 மணிக்கு கலைந்தது. இவ்விஷயங்களை பார்ப்பன பத்திரிகைகள் மறைத்துவிட்டதால் நான் "குடி அரசு"க்கு எழுத நேர்ந்தது.

நா. பா. காளியப்பன், நாகை.

வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாமல் 10-ஸ்தானங்கள் கிடைப்பது வகுப்புவாரிபிரதிநிதித்துவத்தால் 8-ஸ்தானங்கள் கிடைத்தால் போதும். இதனால் "ஸைபுல் இஸ்லாம்" சொல்லுகிறபடி சுயமரியாதை இழக்க வேண்டியதில்லை; ஐயங்காருக்கு நல்ல பிள்ளைகளாக வேண்டியதில்லை; சமுகத்துரோகம் செய்யவேண்டிய அவசியமில்லை; சர்க்கார் தயவைப் பெற வேண்டியதில்லை; தேசத் துரோகம் செய்ய வேண்டிதுமில்லை. ஐயங்கார் இஷ்டப்படி நடக்க முடியாவிட்டால் ஸ்ரீமான் சக்கரைச் செட்டியாரை கேட்பதைப்போல் நம்மை ஒருவன் ராஜிநாமாச் செய்யும்படி கேட்க வேண்டிய அவசியமும் இராது. இந்தமாதிரி சிறு பிள்ளைகளைப்போல்அபிப்பிராய பேதம் வந்தவுடன் "நான் செய்து வைத்த கவுன்சிலர் வேலையைக் கக்கு என்று கேட்கவேண்டிய அவசியமும் இராது. நமக்காக ஐயங்கார் ஜாமீன்நின்று எலெக்ஷன்களுக்கு ஆயிரம் இரண்டாயிரம் பணச்செலவும் செய்ய மாட்டார்கள். அந்தப் பணத்திற்கு நம்முடைய மானம், சுய மரியாதை, மனச்சாக்ஷி, மதம், தேசம் இவைகளை விற்கவேண்டியும் வராது. ஆதலால் "ஸைபுல் இஸ்லாம்" சொல்லும் வேதவாக்கை உண்மையான முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் கவனித்து சுயராஜ்யக் கக்ஷியின் சார்பாக நிற்காமல் தங்கள் சமுகத்தின் சார்பாகவே நின்று வெற்றி பெற்று இஸ்லாத்தின் நன்மையையும் கூடுமானால் தேச நன்மையையும் நாடுவார்களாக.

மாயவரம் திருமயிலைச் சங்கம்.

இப்பெயர் வாய்ந்த சங்கமொன்று ஏற்பட்டு இதனுதாவில் சாவண பவானந்த வாசகசாலை என்ற ஓர் வாசகசாலையும் நடந்து வருவது யாவருமறிவர். இச் சங்கத்தினர் 20-6-26-ல் ஞாயிறன்று மாலை கூடிய பொதுக் கூட்டத்தில் வருகிற ஆடி மாதம் கடைசியில் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளின் குரு பூஜையொன்று நடத்துவதென தீர்மானம் செய்து அதற்கென ஒன்பதின்மர் அடங்கிய நிர்வாக கமிட்டியொன்றும் நியமித்தும் இன்னும் சில தீர்மானங்களும் செய்யப்பட்டது என்று காரியதரிசி எழுதுகிறார்.

"தமிழர்"

தமிழர் முன்னேற்றத்திற்கென்றே தனித் தமிழ் நடையில் சிறந்த செம்பொருட் கட்டுரைகளுடன் தலை சிறந்து மிளிரும் பத்திரிகைகளில் "தமிழர்" ஒன்றாகும். 50-பக்கங்களில் நல்ல கடிதத்தில் அச்சிடப்படுகிறது.

இதன் வருட சந்தா ரூ. 2—8—0

"தமிழர் நிலையம்"

தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி.

ஜாதி ஹிந்துக்கள் ஆதிதிராவிட மகாநாட்டிற்கு செய்த அநீதியும், வருணாஸ்ரம தர்மிகளுக்கு சில கேள்விகளும்.

ஐயா, 20-6-26ல் தூத்துக்குடியில் நடந்த ஆதி திராவிட மஹாநாட்டின் விசேஷத்திற்காக திருச்செந்தூர் யானையை ஒரு நாளைக்கு 50 ரூபாய் வாடகை பேசி தூத்துக்குடிக்கு வந்திருந்த யானையை சில ஜாதி ஹிந்து விஷமிகள் ஆதிதிராவிடருக்கு யானை கொடுக்க கூடாதென்று பாகனிடம் சொல்லி பயமுறுத்தி யானையை அனுப்பி விட்டார்கள். இது விஷயமாக சில கேள்விகள் கேள்கிறேன். வர்ணாசிரம 'தர்மி'களான அதர்மிகள் தயவு செய்து விடையளிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

1. தென் இந்தியாவிலுள்ள ஆதி திராவிடர்கள் மக்கள் தொகுதியினரா? அல்லது மிருகங்களா? அவர்களைச் சேர்த்து 33 கோடி ஜனங்களென்று சுயராஜ்ஜியங் கேட்பது வெட்கமல்லவா? ஆதலால் லார்ட் சைடன்ஹாம் "இந்தியாவிற்கு சுயராஜ்யம் கொடுத்தால் வாயில்லா பூச்சிகளாகிய ஒடுக்கப் பட்டவர்களை பார்ப்பனர்களுக்கு நரபலி கொடுத்தது போலாகு" மென்று சொன்ன வார்த்தை உண்மையா? பொய்யா?

(2) ஹிந்துக்கள் சுவாமி கோயில் கட்டும் போது கோயில் அஸ்திவாரம் தோண்டியது, சாந்து குழைத்தது, கற்களை கோபுர மேற்றியது முதலிய வேலைகளை ஆதி திராவிட ஆண் பெண்கள் செய்திருப்பார்களா? அல்லது பிராமண ஆண் பெண்கள் செய்திருப்பார்களா?

3. வயலில் விதைத்தல், உப்பு விளைத்தல் முதலிய உணவு பொருள்களை உயர் குலத்தோர் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் தானா பயிரிடுகிறார்கள்?

4. கோயில் யானைகள் இறந்தால் புதைப்பார்களா அல்லது ஐராவத யாகஞ் செய்வார்களா? இறந்த யானைகளைப் புதைப்பவர்கள் யார்?

5. திருச்சூரில் ஒரு ஆதித் திராவிடன் கோவில் துவஜஸ்தம்பம் வரையில் நுழைந்து விட்டதற்காக தெண்டிக்கப்பட்ட கேசுக்கு அப்பில் கோரி சாட்சிகளாக மகாத்மா காந்தி, டாக்டர் வரதராஜுலு நாயுடு, கனம் ஈ. வெ. இராமசாமி நாயக்கர் முதலியவர்கள் வந்தால் கேஸ் ஜெயமாகி ஆதி திராவிடர்கள் எப்பொழுதும் கோவிலுக்குள் போகும் சுதந்திரத்தை பெற்று விடுவார்கள் என்ற பயத்தால்தானே "அவன் ஓர் வித அறிவினால் போனான்" என்று மன்னிப்புப் போன்ற ஓர் தீர்ப்பை செய்துவிட்டார்கள்? அல்லது அது உண்மையான தானாயிருந்தால் இப்பொழுது ஏன் ஆதி திராவிடனை ஆலயத்துக்குள் நுழையவிடவில்லை?

6. தர்மாகிய மகாத்மா காந்தியின் இயக்கங்களும், பிமிசனுசிகிய மௌலானா ஷவுகத்அலியின் மகமதியர்களும் இரத்தஞ் சிந்தும்படி ஏற்பட்ட கலகமானது அந்த பாழாய்ப்போன வர்ணாசிரம தர்மிகளின் அக்கிரமமான செய்கையினால் தானே?

7. தெய்வாம்சமான மகாத்மா காந்தியின் வார்த்தையை உண்மையான மனச்சாட்சியோடு ஏற்றுக் கொள்ளுகிறீர்களா? அப்படி ஏற்றுக்கொண்டால் மகாத்மா சொன்ன முக்கிய அம்சமான தீண்டாமையை இன்னமும் நீக்காமலிருப்பது தொன்று தொட்டு அனுஷ்டித்து வரும் உங்கள் ஜாதிக் குணமா? அல்லது இடையில் ஏற்பட்டதா?

8. கடைசியாக திருச்செந்தூர் வர்ணாசிரம தர்ம யானையானது ஆதி திராவிட வீரைய சிங்கத்தின் முன்வர பயந்து ஓடிப்போயிருக்கலாமா? அல்லது வேறென்ன? ஆனதால் ஜாதி வேற்றுமை புரியும் வர்ணாசிரம அதர்மிகளே! (எல்லா இந்துக்களையும் குறிக்காமல் ஆதி திராவிடர்களுக்கு எப்பொழுதும் தீங்கிழைக்க கங்கணங்கட்டித் திரியும் விஷமிகளானவர்களை மட்டும் இந்தக் கேள்வி கட்டுப்படுத்தும்.)

எங்கள் தலைவர் R. வீரையன் M. L. C. அவர்கள் கூறுவது போல் ஆதி திராவிட மக்களுக்கு தீங்கு செய்யாமலிருப்பதுவே எங்களுக்கு சுயராஜ்யம் என்பதை கவனித்து நடந்துகொள்ளும்படி தயவாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

யோ. இ. பால்வண்ணம், தூத்துக்குடி.

பார்ப்பனப் பத்திரிகை நிருபரின் பித்தலாட்டம்.

(தூத்துக்குடியில் நடந்த ஆதித் திராவிட மகாநாட்டில் நிகழ்ந்த விஷயத்தில் சிலவற்றை பார்ப்பனப் பத்திரிகைகளின் நிருபர்கள் மாற்றி எழுதியிருப்பதன் சம்பந்தமாய் திரு. பி. பலவேசம் எழுதியுள்ள கடிதத்தை அடியில் முழுதும் பிரசுரித்திருக்கிறோம். இக் கடிதத்தில் அந் நிருபர்கள் எத்தகைய பித்தலாட்ட முறையில் விஷயத்தை மாற்றி எழுதியிருக்கிறார்களென்பது நன்கு விளங்கும். இம் மாதிரியான நிருபர்களைப் பற்றி நாம் எத்தனையோ தடவை யெழுதியிருந்தும் மான, வெட்க, ரோஷம் கொஞ்சமுமில்லாமல் மேலும் மேலும் அயோக்கியத் தனத்தையே கையாண்டு வருகிறார்கள். இவர்களுக்கு எப்பொழுதுதான் நல்ல புத்தி உண்டாகுமோ? ப-ர்)

மாட்சிமை தங்கிய கனம் பத்திராதிபர் அவர்களுக்கு நமஸ்காரம். தங்களுடைய பத்திரிகையில் அநாவசியமான விஷயங்கள் பிரசுரிக்கப்படாமற் போனாலும் இந்த ஏழை ஆதித்திராவிட மக்களுக்காக வேண்டி இக் கடிதத்துடன் அனுப்பியிருக்கும் விஷயத்தை சத்தியமுள்ள பத்திரிகைகளில் ஒன்றான தங்களின் "குடி அரசில்" பிரசுரிக்கும்படி தாழ்மையாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

கனம் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் அவர்கள் ஆதித்திராவிடர்களுக்காகப் பிரத்தியேகமாய் தோண்டப்பட்ட கிணற்றின் விஷயமாக பிரசங்கித்த சொற்பொழிவு என்றும் எங்களின் உள்ளத்தை விட்டு நீங்காது. அவரின் உண்மையான பிரசாரத்தை போற்றாதவர் எவர்.

நிற்க ஆதித் திராவிடர்களுக்கு உத்தம நண்பர்களாகிய கனம் டாக்டர் நாயர், கனம் பி. டி. தியாகராஜ செட்டியார், கனம் ஈ.வெ. இராமசாமி நாயக்கர் முதலியவர்கள் எங்களுக்கு செய்த உபகாரங்களை சிலாகித்து எங்கள் மகாநாட்டில் பேசி இருக்க அதற்கு மாறாக ஐயங்காரரையும் பந்துலுவையும் மற்றொரு பிள்ளையையும் பற்றி சிலாகித்துப் பேசினதாகப் பிராமணப் பத்திரிகைகள் பிரசுரித்திருக்கின்றன. அந்த விஷயங்களுக்கு மறுப்பெழுதியிருக்கிறோம். அதை அனுப்பினால் வியாசம் பெருகி தங்களுடைய பத்திரிகைக்கு இடைஞ்சல் ஏற்படுமென்று எண்ணி அடுத்த வாரம் அனுப்பலாமென்று நிறுத்திக்கொண்டோம்.

இப்படிக்கு;
P. பலவேசம்.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களும் தங்க மெடல்களும் பரிசுபெற்றது.

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதி தயிலம்.

இந்த தயிலமானது மூளைக்கும், கண்களுக்கும் குளிர்ச்சியைத் தரக்கூடிய அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது.

இத் தயிலத்தை வாரம் இருமுறை ஸ்நானம் செய்துவந்தால் கை, கால், கண் எரிச்சல், கண்ணில் நீர் வடிதல், கண் சிகப்பு, நித்திரையின்மை, தலைநோய் மண்டைக் குத்து, மூளைக்கொதிப்பு, காதில் வலி, சீழ் வருதல், பீனிசம் முதலிய பலவித நோய்களையும் குணப்படுத்தக்கூடியது.

இத்தயிலத்தை உபயோகித்த கனவான்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்துகொண்டே யிருக்கிறது. இத்தயிலத்தை மேல்சொன்ன நோயுள்ளவர்களும், யாதொரு நோயுமில்லாத ஆண், பெண் யாவரும் உபயோகிக்கலாம். ஒரு முறை பரிக்ஷித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். பத்தியமில்லை.

24 அவு. பாட்டல் ரூ. 4—0—0
12 அவு. பாட்டல் ரூ. 2—2—0
வி. பி. தபாற்செலவு பிரத்தியேகம்.

சாலாமிசிரி லேகியம்.

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

இந்த லேகியத்தை சில நாள் சாப்பிட்டு வந்தால் குறைவற்ற ஆண்தன்மை உண்டாவதுடன், கைகால் அசதி, இடுப்புவலி, பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சொற்பனஸ்கலிதம், சம்போக காலத்தில் உண்டாகும் துரிதஸ்கலிதம் முதலிய கொடிய வியாதிகளை நீக்கி, ராஜகருவிகளுக்கு வலுவைக்கொடுத்து, தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி, இரத்தத்தையும், வீரியத்தையும் விருத்தி செய்து நல்ல திடகாத்திர சரீரத்தை உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0
வி. பி. தபாற்செலவு ரூ. 0—8—0

விலாசம் தெரிவிப்பவர்களுக்கு பலவிதமான மருந்துகள் விபரம் அடங்கிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த ஆயுர்வேத ஔஷததசாலை,
தெப்பக்குளம் போஸ்டு திருச்சினாப்பள்ளி.

தமிழ் மக்களே!

நாட்டின் வறுமையை நாட்டை விட்டு ஓட்டும் கதராடையை கட்டுங்கள். ஏழைகள் தொழிலைப் பெறச் செய்யுங்கள்.

மின்சார ரசம்.

எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது.

மின்சார ரசத்தின் குணம் எப்படி?

இது ஒரு அபூர்வமான சஞ்சீவி. இதற்கு இயற்கையாகவே ஒரு வித மின்சார சக்தியுண்டு. எந்த வியாதிக்கும் துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். பாஷாண சம்பந்தமான சரக்குகள் இதில்கிடையாது.

மின்சார ரசத்தின் விசேஷமென்ன?

மனிதர்களுக்கு வரும் எல்லா வியாதிகளையும் இந்த ஒரே மருந்து வெகு ஆச்சரியகரமாக குணப்படுத்துகிறது. உள்ளுக்கும் மேலுக்கும் இந்த ஒரே மருந்தை உபயோகிக்கலாம். எந்த விதமான அநுபானமுமில்லை. எவ்வித பத்தியமுமில்லை. பாலியர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள் உள்பட எல்லோரும் எக்காலத்திலும்பயமின்றி உபயோகிக்கலாம்.

மின்சார ரசத்தின் அநுபோகம் எப்படி?

கை கண்ட மருந்து. ஆயிரக்கணக்கான ஜனங்கள் இதை தினந்தோறும் இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் உபயோகித்து வருவதே இதற்கு போதுமான சாக்ஷியாகும். வாங்கினவர்களே பலமுறை ஆர்டர் தருகிறார்கள்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள்! அநேக நற்சாக்ஷிப் பத்திரங்கள் அடங்கிய எங்கள் புது கேட்லாக் வேண்டுபவர்களுக்கு இனமாக அனுப்பப்படும். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபால் செலவு வேறு.

மின்சார ரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.)

தந்தி விலாசம்:—'Rasamco', Salem.

"தமிழன்"

முன்னர் காலஞ்சென்ற திரு. அயோத்திதாஸ் பண்டிதரவர்களால் "தமிழன்" என்னும் பெயர் கொண்ட பத்திரிகை நடாத்தப்பெற்று அவர் காலஞ்சென்றதும் பின்னர் அப்பத்திரிகை நிறுத்தப்படவேண்டியதாயிற்று. பிறகு சில காலம் மற்றொருவரால் நடாத்தப்பெற்றது. அதன் பிறகும் ஆதரிப்பாரற்று நின்று போயிற்று. மீண்டும் இப்பொழுது சாம்பியன் ரீப்ஸ், கோலார் தங்க வயல், சித்தார்த்த புத்தகசாலை வைத்திருக்கும் திரு. பி. எம். இராஜரத்தினம் அவர்களால் ஜூலை மாத முதல் வெளியிடப்படுமென தெரிவிக்கப்படுகிறோம். திரு. இராஜரத்தினம் அவர்களின் நிர்வாகத் திறமையால் நன்கு நடைபெறுமென நம்புகிறோம்.

குடியர்களை குணமாக்கும் அற்புத "லிக்கோரின்"

"லிக்கோரினை" எந்தப் பானத்திலும் கலந்து குடிகாரருக்கும் அபினி தின்போருக்கும் தெரியாமல் கொடுத்து வருவதில் குடியையும் அபினையும் ஆயுளுள்ளவும் விட்டு விடுகிறார்கள். பரீட்சைக்கும் பலனுக்கும் உத்தரவாதம். கடந்த 12 வருஷங்களாக ஏராளமான நற்சாட்சிகள் பெற்றது. பத்தியமே கிடையாது. 12, 18, 25 ருஷக் குடியருக்கு ஒரே புட்டி போதுமானது. தேகத்திற்கு எவ்விதமான கெடுதியும் செய்வதேயில்லை. குடியர்கள் தெரிந்தும் "லிக்கோரினை" சாப்பிடலாம்.

40-நாள் "லிக்கோரின்" விலை ரூபாய் மூன்று.

ஆங்கிலோ இண்டியன் டிரக்கஸ் கம்பெனி,
கோயமுத்தூர், தென் இந்தியா.

ஆரம்ப ஆசிரியர்கள் சங்கம், மேச்சேரி.

இச் சங்கத்தின் வருஷக் கொண்டாட்டம் 1926-ஞ் ஜூன்-மீ 26-ந் தேதி சனிக்கிழமை பிற்பகல் 1-மணிக்கு சேலம் ஜில்லா எடுகேஷனல் ஆபீசர் திருவாளர் S. A. ஸ்டூல் துரை மகனார் B. A. அவர்களின் தலைமையின்கீழ் நடைபெறும். அவ்வமயம் தாங்கள் வந்திருந்து கொண்டாட்டத்தை சிறப்பிக்குமாறு வேண்டுகின்றனன் என்று காரியதரிசி திரு. எஸ். வி. சௌந்திரராஜன் எழுதுகிறார்.

மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்.

1916-ஞ் ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சீர் திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சும் எமது கம்பெனி சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்தியா
மோட்டார் இன்சினீயரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர்-மதருஸ்.

சோழிய வேளாள மகாஜன 3-வது கான்பரென்சு.

கும்பகோணம் சோழிய வேளாள மகாஜன சபையார் ஆதரவில் 19—6—26-ல் ஜெயின்சுவே ஹாலில், டாக்டர் முத்துக்குமாரசாமி பிள்ளை, பி. ஏ., எம். பி., அண்டு பி. எஸ்., அவர்களது அக்கிராசனத்தின் கீழ் கூடி அடியிற் கண்ட தீர்மானங்களைச் செய்தனர்:—

(1) நாளது ஜூலை-மீ 17, 18 தேதிகளில் இவ்வூரில் மகாநாட்டை நடத்தவேண்டும்.

(2) மகாநாடு நடைபெறுங்காலத்தில் "விவசாயக் கைத்தொழிற் காட்சி" ஒன்றையும் நடத்தவேண்டும்.

(3) டாக்டர் முத்துக்குமாரசாமி பிள்ளை அவர்கள் சேர்மெனாகவும், ஸ்ரீமான் அ. பக்கிரியர் பிள்ளை உபசேர்மெனாகவும் ஸ்ரீமான் பொ. கோவிந்த பிள்ளை பொக்கிஷதாரராகவும், ஸ்ரீமான் கே. எஸ். சுப்பிரமணிய பிள்ளை காரியதரிசியாகவும் செல்வாக்குள்ள 40 கனவான்களை மெம்பராகவும் கொண்ட வரவேற்புக் கமிட்டி நியமனம் செய்யப்பட்டது.

(4) வெளியூர் வாசிகளின் அபிப்பிராயத்தைத் தெரிந்து அடுத்த மீட்டிங்கில் பிரசிடெண்டை நியமிக்கவேண்டும்.

கே. எஸ். சுப்பிரமணியம் பிள்ளை,
காரியதரிசி.

கணக்கில்லா நற்சாக்ஷிப் பத்திரம் பெற்றது.

அயன் மஹா மூலிகை சந்தனாதி தைலம்.

சிரசைப் பற்றிய நோய்களுக்கு தேவாமிர்தம் போன்றது.

உஷ்ணமான வேலைக்காரர்களுக்கும் உஷ்ணதிரேகி, மாணாக்கர், வக்கீல், ஜட்ஜுகள் முதலியோர் பலரும் உபயோகித்து வருகின்றனர்.

பரிமள மணமும் சிறந்த குண முடையது. பத்தியமில்லை.

கண்எரிவு, கண் சிகப்பு, கண் கூச்சம், கண்ணில் நீர் வடிதல், பார்வைக் குறைவு, பித்த மயக்கம், பயித்தியம், ஞாபகக் குறைவு, அஸ்திகாங்கை, மூலச்சூடு, நீர் எரிவு, நீர்க் கடுப்பு, தாகம், நித்திரை பங்கம், பூச்சி வெட்டு, வழுக்கை, மண்டைக் குத்தல், ஒருத்தலைவலி, தலைச்சொறி, காதுவலி, காதுகுத்தல், மயிர்ப் பிளவு, மயிர் உதிர்தல் செம்பட்டை, ஆரம்ப நரை, தேகநாற்றம், முதலிய வியாதிகளைப் போக்கி உரோமத்தை சுருக்கச் செய்யும் திறமை வாய்ந்த தைலம் இது ஒன்றே.

TRADE MARK.

12-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 1-8-0

24-அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை ரூ. 3-0-0

வாரம் இரு முறை எண்ணெய் ஸ்நானத்திற்குப் பதிலாக உபயோகிப்பதுடன் அனுதினமும் தலைவாரிக் கொள்ளலாம்.

சத்திய வேத வீரியதாது லேகியம்.

20-நாள் 40-வேளைக்கு விலை ரூ. 2.

தேகாரோக்கியம் குன்றி, தேகம் வெளுத்து உட்காரவும் எழுந்திருக்கவும் சக்தியற்ற நிலைமையிலுள்ளவர்களுக்கு சுறு சுறுப்பு, புஷ்டி, ஆண்மை முதலியவற்றை ஊட்டும். மூத்திரச் சூடு, சுக்கில ஸ்ராவகம், கல்லடைப்பு, குழிப்புண் உஷ்ணப்புண், அஸ்தி உருக்கம் முதலிய பயங்கர வியாதிகளின் ஆணி வேரைக்கெல்லி யெறிந்து தாதுவை கெட்டிப்படுத்தி தேகத்தை வனப்புறச்செய்யும் கைகண்ட ஔஷதம் சத்திய வேத வீரிய தாதுலேகியம் ஒன்றே.

விலாசம் தெரியப்படுத்தினால் சத்திய வேத வைத்திய சாலையில் செய்யப்படும் சகல வியாதிகளையும் போக்கும் மருந்துகளின் விபரமடங்கிய கேட்லாக் அனுப்பப்படும்.

குறிப்பு:— டாக்டர் ஜி. எல். சாமி அவர்கள் திருச்சினாப்பள்ளி இடத்தெருவில் தருமதமிழ் சித்த வைத்திய சாலை ஒன்று நடத்தி வருகிறார். பிரதிதினமும் நூற்றுக்கணக்கான வியாதியஸ்தர்கள் இனமாக மருந்து வாங்கி சாப்பிட்டு குணமடைந்து வருகிறார்கள்.

டாக்டர். ஜி. எல். சாமி,

சத்திய வேத வைத்தியசாலை, வாணகேரி—திருச்சினாப்பள்ளி.

இனும்! இனும்!

உயர்ந்த விசித்திரமான 15 சாமான்கள் கொடுக்கப்படும்.

அமெரிக்கா தேசத்தில் சித்திர வேலைகளுடன் தயார் செய்யப்பட்ட 18 காரட் கோல்டு பிளேடெட் ரிஸ்லெட் கெடியாரம் தற்கால நாகரீகத்துக்கேற்ற மனோரம்மியமான பலவித விசித்திர பட்டைகள் நிறத்து பள பளப்பான டயலும் உள்ளது. நெடுநாளைக்கு உழைக்கக்கூடியது. உரத்த சாமான்களால் செய்யப்பட்டது. இக் கெடியாரம் தருவிப்பவர்களுக்குக் கீழ்கண்ட சாமான்கள் இனும்: மோதிரம் 1, கூந்தல் எண்ணெய் புட்டி 1, பட்டர் ப்ளை 1, பொத்தான் 4, உயர்ந்த கைகுட்டை 1, தந்த சீப்பு 1, செண்ட் பாட்டல் 1, பிரெஸ்லெட் 1, சிகரெட் கேஸ் 1. சேப்டி பின் செட் 1, விசித்திர பொம்மை 1. கெடியாரம் விலை 7—12—0



விலாசம்:-எஸ். ஆர். கிருஷ்ணா அண்டு கம்பெனி. நெ. 1 தம்பசாமிப்பக்கன் தெரு மதராஸ்

சமத்துவ ஊழியன்.

ஓர் சிறந்த தேசீயத் தமிழ் மாதப் பத்திரிகை

அதிகாரமும், அகங்காரமும், பணத்திமிரும், ஜாதி இறுமாப்பும் படைத்துள்ளவர்களின் அக்கிரமங்களைக் கண்டித்துத் திருத்திப் பாரத உலகத்திலே சமத்துவத்தை நிலைநாட்டுவான் பொருட்டு மாதந்தோறும் வெளிவருவது.

வருடாந்தர தபாற்செலவுடன் ரூ. 2

வி. அ. துரைலிங்கம்,

நெ. 52. செட்டித் தெரு, கொழும்பு.

பிரமேக குல சம்ஹாரி.

பலவித காங்கித் தடிப்புகள், 21 விதமேக ரோகம், 7-வித வெள்ளைரோகம், மலப்பு அரையாப்பு, சூலை, வாதம் முதலிய இதர கொடிய ரோகங்களையும் ஐந்தே தினத்தில் நீக்குகிறது. புட்டி 1-க்கு ரூ. 2. ஏஜண்டுகள் தேவை. கேட்லாக் இனாம்.

ஸ்ரீராமபிரான் வைத்தியசாலை,

திருச்செங்கோடு. (தென் இந்தியா)

இந்தியர் கஷ்டநிவாரண பாங்கு "லிமிடெட்." கோயமுத்தூர்.

காப்பு திரவியம்—ரூ. 2,706.

மூல திரவியம் — ரூ. 5,00,000.

வெளிவிடப்பட்டது — ரூ. 69,100,

வசூலிக்கப்பட்டது — ரூ. 43,890.

டிபாசிட்டுகள் ரூ. 62,580-1-0.

டிபாசிட்டுகள் அடியிற்கண்ட வட்டி வீதத்திற்கு பெற்றுக்கொள்ளப்படும்.

சேவிங்ஸ் பிக்செட் டிபாசிட்டு

இரண்டு வருஷ, கெடுவு வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—10—0

வருஷம் 1-க்கு வட்டி ரூ. 7—8—0

இதற்கு பிரதி மாதமும் வட்டி கொடுக்கப்படும்.

பிக்செட் டிபாசிட்டு.

ஒரு வருஷ கெடுவு, வட்டி.

100-க்கு மாதம் 1-க்கு ரூ. 0—9—0

வருஷ 1-க்கு வட்டி ரூ. 6—12—0

இதற்கு வட்டி 6-மாதங்களுக்கொருமுறையாவதும் வருஷத்திற் கொருமுறையாவதும் வட்டிகொடுக்கப்படும்.

மேற்படி பாங்கானது ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருஷ காலமாக ஒழுங்காக நடந்து வருகிறது. நாளது 10-2-26-உ வருஷாந்திரக் கூட்டமும் நடைபெற்றது. இப்பாங்கானது கோயமுத்தூரில் உள்ள இம்பீரியல் பாங்கை தவிர்த்து மற்ற பாங்குகளைப்போல் 100-க்கு நாள் 1-க்கு ஒரு அணாவும், அதற்கும் அதிகமாகவும், அதிகவட்டி வாங்காமலும், புதிய விதிகளுடனும் குறைந்த வட்டிக்கு (அதாவது 100-க்கு, 0—12—0. 1—0—0) ரூபாயிக்கு எவ்வகையிலும் அதிகப்படாமல் ஏழை ஜனங்களுக்கு அநேக சௌகரியமாகவும் இருப்பதோடு, குறைந்த பங்குகளினாலேயும் மானேஜிங் டைரெக்டர், அவர்களுடைய திறமையினாலும், முயற்சியினாலும், பங்குக்காரர்களுக்கு முதல் வயதிலேயே 100-க்கு ஒரு ரூபாய் வட்டி கொடுக்கப்பட்டிருப்பதுவும் தவிர ரிசர்வு பண்டு ரூபாய் 2,706 சேர்ந்திருக்கிறது. நாளதுவரை யாதொரு போக்குக்குத்தியில்லாமலும் இருப்பதிலிருந்து மானேஜிங் டைரெக்டருடைய தீர்க்காலோசனையும், பாங்கின் நல்ல ஸ்திதியையும் காட்டுகிறது. மேலும் அதிகமான பங்குகள் சேர்ந்து ஏராளமான லேவாதேவி நடந்தால் இப்போது கிடைத்த இலாபத்தைவிட அதிக இலாபம் கிடைக்குமென்றும், ஏழைகளுக்கும் பெரிய உபகாரமாக இருப்பதற்கும் கடவுள் கிருபை செய்வாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

குறிப்பு:—

இந்த பாங்குக்கு ஏற்பட்டிருக்கும் டைரக்டர்கள் ஒவ்வொருவரும் தனித்தனி சொந்த பாங்கு நடத்தக்கூடிய சக்தி வாய்ந்த பெரிய பெரிய தனவந்தர்களாகவும், அமையப்பெற்றிருப்பதால் யாவரும் தங்களிடமுள்ள திரவியத்தை டிபாசிட்டாகவும் பங்குத் தொகைக்காகவும் இப்பாங்குக்கு அனுப்பி உங்களுடைய பணத்திற்கு யாதொரு நஷ்டமின்றி வட்டியுடன் பெற்றுக்கொள்வதோடு, உங்களுடைய திரவிய சகாயத்தினாலும், ஏழைகளுக்கும் சகாயம் செய்த பாக்கியமும் அடைவீர்கள் என்பதற்கு யாதொரு தடையுமில்லை.

ஜி.ராமச்சந்திர செட்டி,

31—5—26. மானேஜிங் டைரக்டர்

கோயமுத்தூர் ஸ்டார் ப்ரஸ் (லிமிடெட்) ஈரோடு பிராஞ்சு பிரசில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.